
REGISTERED NO. M. 1454, தனிப்பிரதி அணா 2



# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

## மாதம் மும்முறைப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்ரோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

தலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம், அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4.] துந்துபி ஹு மாசிமீ 10உ புதன்கிழமை (அருப்புக்கோட்டை.) 1923ளு பிப்ரவரிமீ 21உ [இதழ் 18

## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல் இனிய நாவல்

மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும், பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்ரோரும், மற்ரோரும் நவிந்து கொண்டாடப்பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

## அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ்சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்ரோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே கைவசமிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—

ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

## அநேக பத்திரிகைகளாலும் கற்ரோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது எது?

## ஆநந்தமகிளா.

அநேக சித்திரப் படங்களுடன் கூடியது. மூன்ரும் பதிப்பு.

இச் சிறந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பல நூல்களில் ஒன்று. இதில் ஸ்திரீ புருஷர்களின் அவயவ அமைப்புகள், பொருத்தங்கள், உலக இன்பத்தையடையும் பல நல்வழிகள், தேகாரோக்கிய விதிகள், சந்தான சந்தோஷ ஹேதுக்களும் அவற்றையடையும் விதங்களும், பூர்வீக சந்தோஷ சல்லாப அனுஷ்டா முறைகளும் வெகு தெளிவாய் எடுத்துரைப்பது. விலை 1—8—0.

விலாசம். ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பி முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக் கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F. S பெரையரா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

பிரொப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார். எஸ். ராமசாமி நாடார்

புதியசாலை! புதியசாலை!!

நாடார்குல மித்திரன்

## புத்தகசாலை.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

| | |
|---|---|
| அலரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—8—0 |
| சௌந்திரகாந்தி நாவல் | 0—12—0 |
| அலரியா நாடார் போட்டோ படம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—6 |
| நடராஜப் பதிகம் | 0—1—6 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—6 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி | 0—4—0 |
| 5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |
| விகட வேசிகர்மாலை | 0—1—6 |

குறிப்பு:—8-அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும். விலாசம்:—

நாடார்குல மித்திரன் "புத்தகசாலை"
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

## இனாம்! இனாம்!!

படுக்கை அறையின்
அழகிய லீலா விநோத

## போட்டோ படங்கள்.

இருவருக்கும் ஆச்சரியமான சந்தோஷ சந்தோஷ சல்லாபங்களை யுண்டாக்கி ஆனந்தமயமாகச் செய்யும்.

| | | |
|---|---|---|
| ½ டஜன் | —விலை. | 2—8—0 |
| 12 படங்கள் | — ,, | 4—8—0 |
| 24 ,, | ,, | 8—0—0 |
| 36 ,, | ,, | 10—0—0 |

1 அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு 1923-வது வருஷத்திய காலண்டரும், கேட்லாக்கும் இனாமாய் அனுப்பப்படும்.

எமதுவிலாசம்—
எம். ஜி. ராஜன் & கம்பெனி
74. திருப்பள்ளி தெருவு,
சௌக்கார்பேட்டை, மதராஸ்.

புதிய இங்கிலீஷ்

## சம்பாஷணைப் புஸ்தகம்.

மூன்றுமாத காலத்திற்குள் இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம். மூன்று பாகங்களடங்கியது. இங்கிலீஷ் வாக்கியங்களுக்கு தமிழ் அர்த்தத்துடனும், ஒவ்வொரு பாடத்தின் அடியில் ஏராளமான பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய போதனாமுறைகளை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. இம் மூன்று புத்தகங்களையும் படித்தால் 4-வது பாரத்தில் படிக்கும் மாணாக்கனை விட அதிகமாக இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம்.

1-ம் பாகம் விலை அணா 6, 2-ம் பாகம் அணா 8, 3-ம் பாகம் அணா 10. ஒவ்வொன்றுக்கும் வி. பி. செலவு அணா 6. பிரத்தியேகம்.

மானேஜர், திருநாவுக்கரசு பிரஸ்
ஆரணி; N. A. Dt.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# தியாகராஜன் அல்லது திறமையுள்ள ஓர் வாலிபன்.

(முன் தொடர்ச்சி.)

பத்தாவது பாகம்.

இவ்வாறு கண்ட மாளிகையின் வெளிப்புறத்தில் இராவாசனும் அவனை உபிர்ப்பித்த தினகரனுமாக நின்று கொண்டு அதன் அழகைக் கண்டு அதிசயித்தவர்களாய் உள் நடக்கமாட்டாமல் நின்றார்கள். சற்று நேரம் கழித்தவுடன் தினகரனால் தேற்றப்பட்டு மாளிகையின் அருகே வந்து கதவைத்தட்டினான். மூன்று தரம் தட்டியும் உயிர்ப் பிராணிகளின் சப்தமில்லாதது கண்டு சந்தேகங் கொண்டு சத்தம் செய்யாமல் நின்றார்கள்.

"இந்த நடக்கும் அதிசயங்களைப் பற்றி ஒருவர்க்கொருவர் சம்பாஷிப்பதில்லை என்று வாக்குறுதி செய்து கொண்டு உள்ளே வாருங்கள்" என்ற ஓர் சப்தம் உள்ளிருந்து வந்தது. தினகரன் இவைகள் எல்லாம் அறிந்தவன்போல் மன்னன் குமாரனையும் தைரியப் படுத்தி இருவரும் வாக்குறுதி செய்து கொண்டு உள்நுழையும் சமயம் கதவு தானாகவே திறந்தது. கார்த்திகேயன் முன்னும் தினகரன் அவன் சாயலைப்போல் பின்பற்றிய வண்ணமாக உள்நுழையும் சமயம் இவர்கள் முன் ஓர் அழகிய நாற்காலி தோன்றிற்று. நாற்காலிதான் பேசியதோ என்று வியந்து சுற்றிப்பார்க்கையில் ஓர் பெரிய பூனை அதன்பக்கத்தில் சயனித்திருந்தது. அவர்கள் அதை உற்று நோக்கிய உடன் அது திடீரென்று எழுந்து அந்நாற்காலியின்மேல் தாவ அது பட்டவென்ற சப்தத்துடன் நொருங்கிப்போயிற்று. கார்த்திகேயன் மனம் கட்டுக்கடங்கா சயித்தனால் பீடிக்கப்பட்ட ஓர் குரங்கின் தன்மையை யொத்திருந்த போதிலும் தினகரன் சற்றுவது ஆச்சரியப் பட்டானில்லை.

இன்னும் கொஞ்சதூரம் உட்சென்ற உடன் ஓர் கிழவன் ஓர் பாயில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அக்கிழவன் இடுப்பில் கட்டிய ஓர் கச்சையிலிருந்து ஐந்து கயிறுகள் ஒவ்வொரு திசையிலுமாகச் சென்றிருந்தன. கொஞ்சநேரத்தில் அம்மனிதன் ஐந்து கயிறுகளையும் சுருக்கி இழுக்கும் போது ஒவ்வொரு கயிற்றின் நுனியிலும் ஒரு சிங்கம் கட்டியிருப்பதைக் கண்டார்கள். அச்சிங்கங்கள் தாங்கள் நோக்கியுள்ள திக்கில் செல்வதற்குத் தயாராக இருந்த போதிலும் அம்மனிதன் கஷ்டப்பட்டு வெகு பிரயாசையுடன் அவைகளைத் தன்னிடத்திழுக்கக் கொஞ்சங் கொஞ்சமாய் மேலே செல்லலானான். இவ்விஷயத்தையுங் கண்டு கொண்டு இன்னுங் கொஞ்சதூரம் உள்ளே சென்ற உடன் ஓர் பறவைக் கூட்டத்தின் நடுவே கருடன் ஒன்று சுகமாக நித்திரை செய்வதையும் அதன் பின் பக்கத்தில் ஓர் வேடுவன் வில்லும் கையுமாக நிற்பதையுங்கண்டார்கள். அவ்வேடுவன் கருடனைக் கொல்வதற்காக குறிபார்க்கும்போது இந்தப்பறவைக் கூட்டத்தின் பக்கத்தில் நின்ற ஒரு தேள் வேகமாய்ச் சென்று அவ்வேடனைத் தீண்டிற்று. உடனே அவ்வேடன் தன்கையிலுள்ள வில்லால் அத்தேளை அடித்துத் துன்புறுத்தினன்.

இவைகளை யெல்லாம் கண்ணாரக்கண்டு களித்திருக்கும் சமயம் "பிரதாபமன்னனின் பிரிய குமாரா! வருக! அவன் பின் வரும் என்னுள்ளம் கவர்ந்தகள்வவருக" என்ற தொனியுடன் ஜடாபாரம் தாங்கி காவி வஸ்திரம் தரித்த ஓர்மகானுபாவர் தோன்றினர். அவரைக் கண்ணுற்றதும் தினகரன் சாஷ்டாங்க நமஸ்காரம் சமர்ப்பித்தான், ஆனால் அந்த முனிவர் கார்த்திகேயனிடம் ஓர் லிகிதத்தைக் கொடுத்து "அந்தவழியேசெல்" என்று ஓர் அதிகாரத் தொனியுடன் கட்டளையிட்டார். முனிவர் மொழியா வண்ணம் கார்த்திகேயன் அம்மாளிகையில் நுழைந்ததுபோல் வெளியே வந்து விட்டான். வெளியே வந்ததும் தான் பெற்ற லிகிதத்தை உற்று நோக்கினான். அதில் "வகரரகசியம்" என்று பெரிய எழுத்தால் எழுதப்பட்டிருந்தது. இவ்வெழுத்துக்களைப் பார்த்துக் கொண்டு வரும்போது மரத்தின் பொந்தில் இருந்து வெளிவந்து விட்டார்கள் உடனே இருவரும் அதிவேகமாய் தர்மாபுரியை நோக்கி நடந்தார்கள்.

(இன்னும்வரும்.)

கல்லூரிமாணவன்.

---

# ஆத்மானந்த யோகீஸ்வரரான சுவாமி இராமதீர்த்தர், கல்வி அபிவிருத்திக்குப்பத்திரிகையே சிறந்த சாதனம் என்றுரைத்த ஆழ்ந்த கருத்துள்ள உபதேசம்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பள்ளிக்கூடத்தையே அறியாதவர்கள் கூட அறிவு நிறைந்தவர்களா யிருக்கிறார்கள். நமது சர்வகலாசாலை பட்டதாரிகளைக் காட்டிலும் அதிக விஷயங்களை அறிந்தவர்களா யிருக்கிறார்கள். ஏன் அப்படி? அவர்களுக்கு நயமான தினசரிப் பத்திரிகைகளின் மூலமாக விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இங்கிலாந்திலும், ஜப்பானிலும், அமெரிக்காவிலும் கலாசாலைகளைவிட அதிக விசாலமாக பத்திரிகைகளே அறிவைப் பரப்புகின்றன. கவர்ன்மெண்டாரும் மற்ற கூட்டத்தாரும் நமது தேசத்தில் சிறிது கல்வி பரவச்செய்வதற்காக நன்றி பாராட்டுவோம். அது மாத்திரம் கல்வி பரவப் போதுமானதல்ல. பாமர ஜனங்கள் அறியாமையில் முழுகிக் கிடப்பதற்கும் ஸ்திரீகள் பயங்கரமான அந்தகாரத்திலிருப்பதற்கும் நாமே காரணராகின்றோம் ஸ்திரீகளை யெழுப்புங்கள்! பாமரஜனக் கல்வியைப் பரப்புங்கள். நீங்களும் எழுந்து தேச சமூகத்தை யெழுப்புங்கள் இதற்கு நேரான குறுக்குப் பாதை சுதேச பத்திரிகைகளை விருத்தி செய்வதுதான். உண்மையான உபயோகமுள்ள பத்திரிகைகளை கிளப்புங்கள். ஏற்கனவே ஏதேனும் சுதேச பாஷை பத்திரிகைகளிருந்தால் ஸ்திரீகளுக்காகவும் பாமர ஜனங்களுக்காகவும் அவற்றை விருத்திசெய்யுங்கள். இவ் விஷயத்தில் ஏற்கனவே ஆரம்பஞ்செய்த ஒன்றிரண்டு பிரயத்தனங்கள் தவறிவிட்டனபோலும். ஏனெனில், 'மேலான பயிற்சியுடைய மாணாக்கர்கள் சுதேசப் பாஷைகளை தொடக்கூட வெறுக்கிறார்கள். தாய்பாஷைக்கு கௌரவம் கொடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இந்தியச் சிறுவர்களது சங்கத்தின் ஆதரவில் ஹிந்திபாஷைப் பத்திரிகை ஒன்று ஏற்படுத்துங்கள். (சென்னைக்கு தமிழில் அல்லது தெலுங்கில்) பஞ்சாபிய் பாஷையில் ஏற்படுத்துவது நிறம். ஹிந்தி எழுத்துக்களாக இருக்கட்டும். முடிந்தவரையில் சம்ஸ்கிருத வார்த்தைகளையும் பாரசீகவார்த்தைகளையும் நீக்கிவிடுங்கள். உங்களுக்கு மாத்திரமே விளங்கக்கூடிய நடைகளை நீக்குங்கள். முழுமையும் விட்டொழியுங்கள். இயற்கையாகவே நினைப்பது போலவே எழுதிவிடுங்கள். கலாசாலை மாணாக்கர்கள் சிறுவியாசங்கள் எழுதியனுப்பலாம். நீ படிக்கும்போது உனக்குத் தென்படுகிற மேலான மனோ பாவனைகளையும் சிறந்த உணர்ச்சிகளையும் சுயபாஷையில் கூறுவதற்கு பழக்கம் செய்துகொள். இப்படிச்செய்வது இவ் விஷயங்களைப் படிப்பவர்க்கு பலன் படுவதைக் காட்டிலும் அதிகமாகவே உங்களுக்குப் பலன் கொடுக்கும் பிறர்சிருஷ்டியில் படிப்பவர்கள் பலனடைவார்களென்று எண்ணலாம்.

இந்திய பூமி ஜீவித்திருக்க வேண்டுமானால் ஸ்திரீகளுக்கு கல்வி தாராளமாக கற்பிக்கப்படவேண்டும். உங்கள் மாகாணத்தில் ஒரு ஸ்திரீயும்ஒரு எளியவனும் எழுத்து வாசனையின்றித் தங்கிவிடவேண்டாம். இந்த அறிவீனம் தேசத்தை விட்டு ஒழியட்டும் பத்திரிகையில் ஹிந்தி எழுத்தை (இராம்ன்) உபயோகப்படுத்தச் சொல்வது ஏனென்றால், கூடியசீக்கிரத்தில் ஹிந்தியே தேசப்பொது பாஷையாக ஆகிவிடக்கூடும். ஸ்திரீகளையும்,எளியவர்களையும் படிப்புள்ளவர்களாக்குவது உங்களுக்கு ஏற்பட்ட முக்கிய கடமைகளாகும். இந்தக் கடமையை நன்றாகச் செலுத்தினால் உங்களுக்கும் மேன்மை உண்டு. ஆனால், உங்களுக்கு மற்றொரு வேலை-முக்கியமாக நீங்களே எடுத்துக் கொள்ளவேண்டிய வேலை-இருக்கிறதை மறக்கக்கூடாது. விவசாயபயிற்சியும் தொழிலும் எங்கே அதிகம் கிடைக்குமோ அப்படிப்பட்ட தேசங்களுக்குச் சென்று அடைந்து இந்தியாவில் அந்த உபயோகமுள்ள அறிவைப் பரவச்செய்ய வேண்டும்.

குறிப்பு—சுவாமி இராமதீர்த்தர் இங்கிலீஷ் பாஷையில் எம். ஏ. பட்டம் பெற்றிருந்தும், இந்துமதவேதாந்த சாஸ்திரங்களைக்கற்றுணர்ந்து ஆத்மானந்த யோகியானாலும், நமது பாரதநாட்டின் மேலுள்ள அன்பும் பக்தியும் அவரது சரித்திரம் முழுதும் படித்தால் நன்கு விளங்கும். நமது நாட்டு ஸ்திரீகளுக்கும் பாமர ஜனங்களுக்கும் கல்வி புகட்டப்பட வேண்டிய மார்க்கத்தை வெகுதெளிவாய் உபதேசித்திருப்பதுடன் பத்திரிகைபடிப்பதினாலடையும்மேன்மையைவிரிவாய் விளக்கிக்காட்டி யிருக்கிறார்கள். இவ்வரிய உபதேசத்தை நாடார்கள் ஒவ்வொருவரும் கவனித்துப் பார்த்துப் படித்து படித்தபடி முடிக்கப் பிரயாசையெடுக்க வேண்டியது தத்தம் கடமையாம்.

இவ்வுன்னத உபதேசத்தை முடித்த பின்னர் என்ன சொல்கிறார் என்பதையும் கவனித்தல் வேண்டும். அதாவது குடும்பக்கடன், சமூகக்கடன், தேசியக் கடன் என்ற இவைகளே உங்களுக்கு ஏற்பட்ட கர்மகாண்டம். எந்தக் கர்மாவும் கௌரவமிக்க எந்தக் காரியமும் இருட்டில் நடத்தமுடியாது. இருளடர்ந்த (பாவத்தன்மை மிகுந்த) காரியங்களே இருட்டில் நடத்தலாம். பக்தி என்ற சுவாலையுடன் பிரகாசம் பொருந்திய ஞானமும் சேர்ந்து உன்னிடம் காப்பாற்றப்பட்டாலன்றி உன்னால் யாதொன்றுஞ் செய்யமுடியாது. சிறிது தூரங்கூட முன்னேறமுடியாது. எந்தக் கிளர்ச்சியையும் ஜெயம்பெறுமாறு செய்விக்கும் சக்தியானது உயிர்பெற்ற பக்தியும் உயர்உள்ள ஞானமுமேயாகும். பக்தியென்பது மகத்தானது. வாழ்க்கையை கெட்டிப் படுத்துவதுமாம். ப—ர்.

---

# ஸ்ரீகிருஷ்ண லீலை

(வீரமாமுனி எழுதுகிறார்.)

(முன் தொடர்பு)

மாரிகால மகத்வம்.

இவ்விதம் ஸ்ரீ பகவான் பலவித லீலைகளைச் செய்து சஞ்சரிக்குங் காலத்தில், சூரியபகவான் தென்திசையை விட்டுப் பிரியவும் தென்றற்காற்று வீசவாரம்பித்தது. பின்பு தினகரன் தென்றிசையிற் சென்று கடகராசியிற் பிரவேசித்தான். அந்த ராசியில் சூரியனிருக்கும் போது மேற்காற்று வரவரக் குறைவுபட்டு உலகத்திற்கு கொஞ்சம் சௌக்கியம் கிடைக்கலாயிற்று. இந்தராசியைவிட்டு சிங்கத்திற் சென்றான். மாரிகாலம் வந்தது. அடிக்கடி வாடைக் காற்றும் கீழ்க்காற்றுந்திரும்பித் திரும்பி குளிர்ந்து வீசின. உலகமெங்கும் மின்னல்களுண்டாயின; இடிகள் சப்தித்தன; சித்திர விசித்திரமான இந்திர தனுசு அடிக்கடி சூரிய கிரணத்திற் கெதிர்முகமாக ஆகாயத்தில் காணப்பட்டது. வடதிசையில்த் தோன்றிய கருமேகங்கள் சகலவிதமான ஜலசரங்களுக்கும் விருத்தியுண்டாக்கி பூமியில் மழையை வருஷித்து, மறுபடியும் சூரிய கிரணங்களால் பூமியிலிருந்து இழுக்கப்பெற்ற ஆவிகள் மேகரூபமாய்த் திரண்டும் மறுபடியும் மழைகள் பொழிந்தன. பூமியானது குளிர்ச்சி யடைந்தன. பின்பு சூரியன் கன்னியா ராசியிலிருந்து துலா ராசியிற் பிரவேசித்தான். ஆகாயமும் பூமியும் நதிகளும் மந்த மாருதத்தையுடைய சரத்ருது வினுடைய லக்ஷணங்கள் விளங்கின. வெண் மேகங்கள் சஞ்சார மொழிந்து விளங்கின. கிருஷ்ணபகவான் பலராமர் சகிதம் பிருந்தாவனத்தில் சகல கோபாலர்களுடன் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது அநேகவித விசித்திர லீலா விநோதமாய் விளையாடிய பகவான் யெங்கும் கோவினங்களை பேய்த்து வேணுகானஞ் செய்து கொண்டிருந்தார். அந்த சரதகாலங்களில் கோப கன்னிகைகளாகிய ஐந்து லட்சங் குடிப்பெண்கள் யாவரும் ஸ்ரீபகவானுடைய வேணுகானத்தைக் கேட்டு நாளுக்கு நாள் பகவானிடத்தில் மிகவும் மோக பரவசர்களாகி வீட்டு வேலைகளைப் பாராமல் கூட்டங் கூட்டமாக சஞ்சரித்துக் கொண்டு பகவானுடைய லீலாகுணங்களை நினைத்து சகிஜனங்களை முன்னிட்டுக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலப் பற்றின சர்வேந்திரியங்களை யுடையவர்களாய்மனோலயங்களை அடைந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீ கோபால சக்ரவர்த்தியாய் விளங்கா நின்ற ஸ்ரீ கிருஷ்ண பகவானானவர் தமது சிரோபாதத்தில் ரத்ன பூஷணங்களுடன் மயில் தோகைகளினுடைய காந்தி விளங்க முன்னெற்றிச் சுட்டியினொளி வீசவும் பரிமளமிகுந்த புஷ்பங்கள் கொண்டையில் சூடப்பெற்றும் செவிகளிலணிந்த மகா குண்டலங்களினொளியால் கண்டபாகங்களில் ப்ரதிபலித்து சுந்தரங்களும் இரத்னக்கஸ்தூரிதிலகலங்கார ஊர்த்வ புண்டரங்களின் சிங்காரங்களும் ரத்னக்குண்டலங்களமைந்த காதுகளையளாவிய விசால நேத்திரங்களின் பார்வைகளும் மனோரமணீயமாகிய பிரவாள அதரங்களும் அவை விகசிக்கத் தோற்றுகின்ற இளஞ் சந்திரிகைகளை யொத்த சிறுபற்களிலுண்டாகிய இளநகையிற் காணப்பட்ட கௌரவமும் சங்கு போன்ற கண்டத்திலும் விசாலமார்பிலும் பொருந்திய பூஷணங்களுடன் ஓகாராஜ லக்ஷணங்களுடன் மிருதுசிறு சதங்கை அலங்காரத்துடன் பூந்துகிலையோடும் சதங்கையோடுங் கூடிய ஒட்டியாணத்துள்ளிருக்கக் கட்டியிருக்கின்ற பீதாம்பரம் பிரகாசிக்கவும் பரமயோகிகளுடைய மனமாகிய தாமரைக் காயினிலிருப்பிடமாக வுடைய புதுமம் முதலிய ரேகைகளால் அலங்கிருதமாகிய ஸ்ரீ சரணாரவிந்தங்களையும் சர்வபுவனமோகனகரமாகியும் விசித்திர வர்ணப் பட்டுக்குச்சுகளாலும் அலங்கிருதமாகியும் மதுரஸ்வரங்களை வருஷிக்கின்றதாயும் விளங்குகின்ற புல்லாங் குழலை தமது திவ்விய அதரத்தில் வைத்து ஜகன்மோகனகிய நங்களை யுண்டு பண்ணும் புருவங்களை நெறித்து இரண்டு கன்னங்களும் பூரித்து ஸ்ரீ பெரிய பிராட்டியார் ரமாக்கருளியிருக்கின்ற திருமார்பை நெகிழ்த்து ஸ்வரபேதங்களை கற்பிக்கின்ற சாதுர்யங்களினால் தாமரை போன்ற முகம் பிரகாசிக்க அந்தவேணுவின் ஸ்வரத்துவாரங்களின் மீது இடவலமாகத் தமது மிருதுவாகியவிரல்களின் வைப்புதலைக்கொண்டு சங்கீத சாஸ்திரப்படிக்கு ஷட்ஜம மத்யம.தைவத, நிஷாத.பஞ்சம ருஷப, காந்தார மென்னும் ஸப்த ஸ்வரங்களை யுண்டாக்கி ராகபேதங்களோடும் சேதன சேதனப் பிரபஞ்சங்களும் அத்திவ்ய ஸ்வராமிர்தங்களை தங்கள் செவிகளே வாயாகப் பானஞ்செய்து மகாசந்தோஷங்களைக் கொண்டுய்யும்படி கந்தர்வதேவதா கீதஸ்வரங்களை தமது ஏழ லோசையினூற்பாடி யருளினார். இவ்விதமாகப் பாடுகின்ற பகவானுடைய மதுரத் தொனியைக் கேட்ட மாத்திரத்தில் அந்தப்பிருந்தாவனங்களில் வாசஞ்செய்கின்ற தபோதனர்களும் வனவாசிகளாகிய வேடுவர் முதலிய ஜனங்களும் தினந்தோறும் பகவானைப் பிரியாமல் அவருடைய லீலா விநோதங்களை தங்களுக்கு ஜீவனமாக அநுபவித்து ஆனந்தித்துக் கொண்டிருப்பார்கள். பட்சிசமூகங்களும் தமக்குள்ள விரோதங்களைவிட்டு ஆனந்தபரவசம் கொண்டிருந்தன. கோபிகாஸ்திரீகளும் கண்ணனுடைய வேணுகானத்தைக் கேட்டு யாவருமோரிடத்தில் இன இனமாகச் சேர்ந்து பகவத்குணமோகன மானஸர்களாய் சரீராபிமானத்திற்குறிய பெண்குணமாகிய நாணம் அச்சம் மடம் பயிர்ப்பு வென்னும் நான்கு குணத்துள் முக்கியமாய் காப்பாற்றத்தகுந்த முதற்குணமாகிய நாணமென்பதை சிறிதுங் கொள்ளாமல் விட்டு ஸ்ரீ கிருஷ்ண சுவாமியை தியான பூர்வமாக ஆலிங்கனஞ்செய்து ஒருவர்க் கொருவர் சரீரபரவசர்களாய் பரிசுத்தமாவதற்காக ஸ்ரீ கிருஷ்ணனுடைய சதுர்யாதி லீலைகளை அநுபவிக்கத் தொடங்கினார்கள். தன்னை மறந்து ஒருவர்க் கொருவர் கிருஷ்ணனுடைய லீலாவிநோதங்களை வருணனை செய்து பேசத்தொடங்கினார்கள். கிருஷ்ணனுடைய உருவத்தை யன்றி வேறொன்றையும் பார்க்காதவர்களாய் எல்லாம் கிருஷ்ணவதாரியென மடங்கிப்புகழ்ந்தார்கள்.

நற்றவமிலழந்த நாரீரத்னமே! இந்த பிருந்தாவனத்தில் விருத்தியடைந்து வாசஞ்செய்து கொண்டிருக்கிற வேடஸ்திரீகள் நார்க்களினுற் சின்னிய வஸ்திரங்களை யுடுத்தி தளிர்களையும் சிறகுகளையும் அவைடவங்கள் மறையச்சாத்திக் கொண்டு இவ்வன மார்க்கங்களில் வேணுகானங்களைச் செய்து சஞ்சரிக்கின்ற இந்த கிருஷ்ணமூர்த்தியினுடைய பாதார விந்தங்களில் அலங்கிருதார்த்தமாய்த்தரிக்கப்பட்டிருந்து அவ்வனத்திலுள்ள புற்கொடி புதர்களில் ஒட்டிக்கொண்டதாகிய சந்தனபுஷ்பகுங்கும மாங்கித வாசனாதிரவியங்கள் கலந்த கலவைச்சேற்றை எடுத்துத் தங்கள் ஸ்தனபாரங்களிலும் நெற்றிகளிலு மணிந்து இந்த ஆரண்யங்களிலிருக்கின்ற மகாமதுரமானகந்த மூலபலாதிகளை சம்பாதித்து நானாவித திவ்யபரிமள வன புஷ்பங்களை சரஞ்சரமாகச் சேர்த்துதங்கள் காங்களிலேந்திக் கொண்டு இந்த திவ்யபுருஷசிரேஷ்டரைப் பிரியாமல் முரளிகானாம்ருதங்களை செவிகுளிர பானஞ்செய்து திருப்தியடைந்த மனமுடையவர்களாய் மெய்மறந்து பாரங்களினால் இடை துவளும்படி நடந்து வந்து இந்த திவ்யமூர்த்திக்கு ஒவ்வொருத்தியாக அந்தக் கனிகளையும் புஷ்பச் சரங்களையும் சமர்ப்பித்து பிரம்மானந்தமாய் சந்தோஷிக்கின்றார்கள்; இவைகளைப்பார் என்று கோபிகைகள் ஒருவருக்கொருவர் காட்டிப் பேசிக்கொண்டார்கள். கோவினங்களும் கிருஷ்ணனுடைய வேணுகானத்தைக் கேட்டு ஆனந்தமாய் இறைதேடுவதைவிட்டு கிருஷ்ணவதார உருவத்தில் லயித்துநின்றன. இப்படியே பிருந்தாவனத்திலுள்ள ஒவ்வொரு ஜீவராசிகளும் சர்வபிரபஞ்சங்களையும் ஸ்ரீ கிருஷ்ணமயமாக நினைத்து மனோலயங்களை அடைந்தார்கள். (இன்னும்வரும்.)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# செய்தித் திரட்டு.

### அரிய ஒரு தருமம்.

சென்னபட்டணத்திற்கு அருகிலுள்ளதும் பாடல் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்றாகியதுமாகிய திருவெற்றியூர் தியாகராஜப் பெருமானுக்கு நிகழும் துந்துபிளு மாசிமீ 10உ (21-2-23) புதவாரம் முதல் நடக்கும் பிரமோத்சவத்திற்கு சென்னை பாலர்களின் பசிநிவாரண தருமபரிபாலன சங்கத்தின் அதிபராகிய மகா-௱-௱-ஸ்ரீ வெ. இ. கதிர்வேலுநாடார் அவர்கள் பலபுண்ணிய சீலர்களின் பொருளுதவியைக் கொண்டு சென்னை திருவெற்றியூர் ஐரோட்டு 4-வது மைலுக்கருகில் தண்ணீர்ப்பந்தலமைத்து முதற்திருவிழா முதல் பதினொராந்திருவிழாவாகிய பந்தம்பறிவரையில் பகலிலும் இரவிலும் நீர் மோரும், சுக்கு வெந்நீரும் யாத்திரைவாசிகளுக்கும், குழந்தைகளுக்கும் அன்னமும் அளிப்பதுடன், யாத்திரைவாசிகளுக்கும்,ஏழைகளுக்கும்எண்ணெய்ஸ்நானம்செய்வித்தல்சுமங்கிலிகளுக்குதாலிக்கயறு, குங்குமம்மஞ்சள், கண்ணாடி, தாம்பூலம், பற்பொடி, திருநீறு, சந்தனம், சுண்ணாம்பு, உதவல் ஆகிய அறங்களையும் மேற்குறித்த பதினொருநாளும் இரவு 8-மணிமுதல் பல வித்துவ சிகாமணிகளால் சைவப்பிரசங்கங்களும் நடத்துவிப்பதாக பத்திரிகையில் பிரசுரித்திருப்பதை யான் கண்டு களிபேருவகை கொண்டனன். இதுபோல் நம் தமிழ் நாடெங்கும் தருமம் தழைத்தோங்கும் வண்ணம் தண்ணருள் புரியும்படி கண்ணுதற் கடவுளின் கழலடியை அன்புடன் பராவுகின்றனன் என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

• • •

### கமுதி திருமடாலய கும்பாபிஷேக மஹோத்ஸவம்.

கமுதியென்ற திருக்கமலைமாநகரமென்னும் திவ்விய திருக்ஷேத்திரத்தின் கண்ணுள்ள பிரஹ்ம ஸ்ரீ வன்னியம் பிரஹ்மானந்த ஞானதேசிக சுவாமிகளின் மாணாக்கர்களிலொருவராகிய கணபதியானந்த ஞானதேசிக சுவாமிகளின் பிரஹ்மவித்தியாசாது சங்கத்திருமடாலயமென்னும் திருநாமம் சூட்டப்பெற்றதும் இவ்வூர் வாசிகளான நாடார்களால் கட்டிசம்பூர்ணம் செய்து வைக்கப்பட்டதுமான ஷை திருமடாலய கும்பாபிஷேகம் நாளது தைமீ 9உ (22-1-23) மஹா ஆனந்த ஆரவாரமென்னும் தேவாரத் திருவாசக திருப பஜனை முதலிய மஹா கெம்பீர வைபவ கோஷ்டிகளுடன் பிரஹ்ம ஸ்ரீஜகத்குரு சங்கர பகவத் பாதாச்சாரியாள் திருவோலக்க மஹாத்மியத்துடன் ஷை திருமடாலய பிரவேச கும்பாபிஷேக கற்பூர ஆராதனகேஸ்பர பூஜை வெகு ஆனந்தானுபவத்துடன் பூர்த்தியாகி நடைபெற்றது என்று வீ. ச. வீரகுமாருநாடார் எழுதுகிறார்.

• • •

### தனலக்ஷிமி லாட்ஜ் மதுரை.

ஷை லாட்ஜில் தைமீ 16உ புதுக்கணக்கை முன்னிட்டு எங்களால் வெளியிட்ட பிரசுரத்தில் சொல்லியபடி நம் கான்பரென்ஸ் போஜன வைபவம்போன்று சிறப்புடன் நடத்தி தனவான்களது மனதைக் களிப்புற செய்தோம் இனியும் இம்மாதிரி வைபவங்களை இடை இடையே நடத்தி வைக்க தனவான்கள் எங்கள் லாட்ஜுக்கு விஜயஞ்செய்து உதவிசெய்ய வேண்டுகின்றோம். மேலும் கோடைகாலத்தை முன்னிட்டு குற்றாலத்திற்கு விஜயஞ்செய்யும் நம் தனவான்களுக்கு வேண்டிய போஜனவசதி

# கடிதங்கள்.

[கடிதநேயர்களின் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

### அரைகுறை கையெழுத்து.

ஐயா. நம்பாரதகண்டத்திலுதிக்கும் இந்திய மக்கள் ஒவ்வொருவரும் ஆங்கில கலாசாலையில் வாசித்து சிறு உத்தியோகமுதல்பெரும் உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனல் நம் இந்து நாடார்களும் கிறிஸ்தவ நாடார்களும் பெரும்பாலும் பி. எ., பி. எல்., யம். எ., வரையும் படித்து விட்டு கவர்ன்மெண்டு உத்தியோகக் கோதாவில் இறங்காமல் வியாபாரத் துறைகளில் அமர்கிறார்கள். இந்திய இராஜாங்க முறையிலுள்ள ஒவ்வொரு டிபார்ட்மெண்டுகளிலும் நம்நாடார் சகோதரர்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒருவர் அல்லது இரண்டு பேர்வழிகள்தான் உத்தியோகம்பார்க்கிறார்கள். மற்றசமூகத்தார்கள் செல்வாக்குஅதிகமிருப்பதின் காரணம் உத்தியோக முறைதான். ஆகையால் இன் நவீன நாகரீககாலத்தில் நம் சகோதரர்கள் ஒவ்வொருவரும் உத்தியோக முறையில் அமர்ந்து தொண்டாற்றல்நம்முடைய முன்னேற்றத்திற்கும் செல்வாக்குக்கும்நன்மையுண்டாகும். நம்மில் பெரிய மேதாவிகளும் பெரிய உத்தியோகஸ்தர் வர்த்தகர்களும் தம்குலத்தைவிளக்காமல்ஆங்கிலேயர்களைப்போல் அரைப்பெயரா கையெழுத்திட்டுஇதையேவழக்கத்தில்உபயோகிக்கிறார்கள். அதாவது பழனிச்சாமி, ஆப்ரகாம், நடராஜன், டேவிட், சண்முகம், ஆசிர்வாதம், பொன்னையா, ஞானசிரோன்மணி, பெரியநாயகம், இராஜரத்தினம், துரைராசு எனபேர்கள் வழங்குகின்றன. மற்ற சமூகத்தாரோ அவரவர் குலம் பிரகாசிக்கவேண்டி இருளப்ப பிள்ளை, முத்துமாடஞ் செட்டியார், பொம்மைய நாயக்கர், சாம்பசிவமையர், அப்பாசாமி முதலியார், கொங்கனுச்சாரி என முழு விலாசத்தோடுகையெழுத்திடுகின்றனர். ஆகையால் க்ஷத்திரியகுலத்திலுதித்த ஒவ்வொரு உத்தமர்களும் தங்கள் குலம் பிரகாசிக்கவேண்டி முழுப்பேருடன் உபயோகிக்க வேண்டுகிறேன்.

K. p. குமாரசாமி நாடார் சிவகாசி.

• • •

### அறிவிப்பு.

சாலோக, சாமீப, சாரூப, சாயுட்சிய சாக்ஷாத் பரப்ரமத்தின் சகாயத்தால் இரண்டாவதாண்டுபஞ்சாங்கங்கணித்துவைத்து இருக்கிறேன். சென்றவருஷ பஞ்

கனா செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவருவதாகவும், மானேஜர் எழுதுகிறார்.

• • •

### நாகபட்டணம்.

கூலிகளின் சச்சரவு.

(நமது நாகபட்டணம் நிருபரிடமிருந்து.)

இவ்வூர் துறைமுகத்தில் மஜூரா கம்பெனிக்கு கப்பலிலிருந்து வரும் சரக்குகளை படகிலிருந்து பறிக்கவும், ஏற்றவும், நெடுநாளாய் மொக்கட்டை வகுப்பைச் சேர்ந்த கூலியாள்கள் (தலையில் சுமப்பவர்கள்) வேலை செய்து வந்தார்கள். முன் ஒரு சமயம் மஜூராக் கம்பெனியார் இறக்குமதி சார்ஜை அதிகமாக்கின போது கூலியாள்களுக்கும் கூலியை அதிகமாய்க் கொடுத்தார்கள். அப்படியிருக்க அடிக்கடி கூலி இன்னும் அதிகமாக வேண்டும் என்று சுமார் ஒரு மாதத்திற்கு முந்தி கப்பல் துறைமுகத்திற்கு வந்த பிறகு கூலியை அதிகப்படுத்த வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்தார்கள். பிறகு ஏதோ சமாதானமாகி அவர்களேதூக்கிவந்தார்கள். திரும்பவும் 3 தேதி யன்று 'எலங்கா' கப்பல்துறைமுகம் வந்து படகில்வந்த சரக்கை இறக்கக் கூப்பிடும்போது அதிகமாய் கூலிகேட்டார்கள் போலிருக்கிறது. பிறகு கம்பெனியார் அடிக்கடி இந்த தொல்லை உதவாதென்று எண்ணி 2பேர்வழிகளிடம் ரொக்க டிபாசிட் வாங்கி எக்ரிமெண்டு செய்துகொண்டு வேலையைச் செய்ய ஆரம்பிக்கவே அந்தப் புதுக்கூலிக்காரர்களை சண்டைபோட ஆரம்பித்தார்கள். பிறகு போலீஸ் பந்தோபஸ்தோடு இறக்குமதி ஏற்றுமதி நடந்தது வேறு கலவர மில்லை.

சாங்கத்தில் நம்குலத்தவர்களிற் சில செட்டியாபத்து ஊரின்கண் நடைபெற்று வரும் தேவாலயோற்சவாதிகளை மட்டும் பஞ்சாங்கத்திற் பிரசுரஞ் செய்திருக்கிறார்களோ தவிர வேறெத்தனையோ நம்மவர்களிலுலயங்களிலுற்சவாதிகள் நடைபெற்று வருகிறது. அவைகளியெல்லா மொன்றாவது பஞ்சாகத்தாற் பிரசுரிக்கவில்லை யெனக் குறைகூறிய தனவான்கட்பலரும் அடுத்தவருஷத்திற்காக கணிதஞ் செய்து வைத்திருக்கிற பஞ்சாங்கத்திற் பிரசுரஞ் செய்யும்படியாக தங்கள் தங்களூர்களிலமையப்பெற்றுள்ள முக்கிய ஆலயோற்சவாதிகளை (அதாவது திதி நக்ஷத்திரங்களையனுசரித்து விவரப் பெற்றுள்ளவைகளை) யெக்குத் தெரிவித்தாலுடனே பிரசுரிக்கப்படும். பிந்தினுற் பிரசுரிக்க வியலாது.

கெ. எம். துரைஸ்வாமி நாடார்,
ஜ்யௌதிஷம்
செட்டியாபத்து.
கிறிஸ்தியாநகரம் P. O.

• • •

### நாடார் மகாஜன சங்கம் சர்க்கிள்கள்.

இப்போது மதுரையில் நடந்த கவுன்ஸில் மீட்டிங் தீர்மானப்படி நாடார்கள் வசிக்கும் கிராமங்களை சர்க்கிளாகப் பிரிக்க ஏற்பாடு செய்திருப்பது ஒரு சந்தோஷமான காரியமே. பிரிப்பதினுல் அங்குள்ள குல அபிமானிகள் தங்களுக்கு தலைமை வகித்திருக்கும் சர்க்கிள் கமிட்டியார் உத்திரவிட்ட பிரகாரம் மகாஜன சங்கத்திலிருந்து வரும் சர்க்குலர்களையும் சட்டதிட்டங்களையும் ஒவ்வொரு கிராமத்துக்கும் அனுப்பி நம்குலத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அறியப்படுத்திவருவதால் நமது சங்கத்தின் பேரில் அன்புண்டாகி, சந்தா நன்கொடை, தலைக்கட்டுவரி பிரிக்கவும், அப்படி வரூலானதை அந்தந்த வருஷத்தில் வெளியாகி வரும் சங்கரிப்போர்ட்டுகளை பார்த்து, அபிமானமுள்ளவர்கள் பேர்பதியப்பட்டிருப்பதைக் கண்டு மேலும்மேலும் தங்கள் தங்கள் சர்க்கிளில் ஜாஸ்தி சந்தா வசூல் செய்து அந்நாள கல்வி அபிவிருத்திக்குஅவைகளைக்கொண்டுநாடார் மகாஜன சங்கத்தின் அனுமதியைக் கேட்டு படிப்படியாய் படிப்பை விருத்திசெய்துவா ஏதுவாகுவதுடன் நற்பழக்க வழக்கமும் உண்டாகும்.

இவ்விஷயங்களுக்கு நாடார் மகாஜன சங்கத்திலிருந்து இப்போது ஏற்படுத்திய ஒவ்வொரு சர்க்கிளுக்கும் முக்கியமானயிடத்தில் நாடார் மகாஜன சங்கம் சர்க்கிள் கமிட்டி என்ற நாமத்துடன் கமிட்டியார்களையேற்படுத்தி அதற்கோர்பிரசாரகரையும் நியமித்துவைக்கவேண்டியது அத்தியாவசியமானது.

மேலும் நாடார் மகாஜன சங்கம் கணக்கு ஒவ்வொரு மார்ச்சுமீ 30உ யோடு முடிவாகிற வருஷபூர்த்தி கணக்குகளையும் நமது ஜனங்கள் அறியும்படி ஒவ்வொரு சர்க்கிளுக்கும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் ஒவ்வொருவரால் வசூலானது எழுதப்பட்டு நாடார் மகாஜன சங்கம் சங்கரிப்போர்ட்டுத் தயாரிப்பதற்கேற்ற வழிவகை இப்போதே ஆரம்பித்துச் செய்து வரவேணும்.

மேலே சொல்லியபடி 1923ளு மார்ச்சுமீ 30உ யோடு முடிவாகிற வருஷத்துக்கு ஒவ்வொரு சர்க்கிளுக்கும் தனித்தனியாகவும் மொத்தமாகவும் சங்கரிப்போர்ட்டும் தயார் செய்து நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகள் அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்!

ப. அ. குமரவேல் நாடார்
தூத்துக்குடி.

# ரஸத்திரட்டு.

### பணமே! இதென்ன உன் குணமா!

ஈட்டி எட்டியமட்டும் பணம் பாதாளம்வரையும் பாயும் என்னும் பழமொழியை சமயபேதமாக அனர்த்தம் பண்ணிக்கொண்ட சிலர் அதே வேதமெனக்கொண்டு மணங் கொண்டமட்டுக்கும், பணக்காரன் பின்னுல் பத்துப்பேர், பயித்தியக்காரன்பின்னுல் பத்துப்பேர் என்பதுபோல தனது நலைமைக்கு பக்கபலமாகதுராலோசனைக் கர்த்தர் சிலரைக் கூட்டிக்கொண்டு இல்லாத தார்க்கிருத்தியங்களைச்செய்து. காசிப்பட்டும், கனத்த வைரேரியமிழைத்த பலவகை ஆபரணங்களாலும் உடைகளாலும் தற்கால மேனுட்டு நாகரீகத்திற்கொப்ப கண்மூடித்தனமாய் அலங்காரம்பண்ணி, சூக்ம சரீரத்தின் வாசனையே கிடைக்கப் பெறுத ஸ்தூல தேகத்தை திருப்தி பண்ணுவதே தமது கடமையெனக் கருதி, வேடிக்கை பார்க்கும்... பண்ணுவதே தமது கடமையெனக் கருதி, வேட்டைக்காரப்பிடிப்பு எடப்போலேயில் தேரிப் என்பதுபோல மாய்கைவாய்ப்பட்டு ஒவ்வொன்றிலும் பரீக்ஷை பெற்றும் இடையில் தளர்ந்தவர்களாயும் சிறிது காலத்தில் கையில் ஊக்கமில்லாதவர்களாய் தரிபுத் திரைக்ஷைப்பழப் என்று சிறுவர் பாடக்கதையைப் படித்துகொண்டு தற்கால பிரிட்டிஷ் அரசாங்கத்தில் ஓர் பிரபல பிரஜையால் தன் அரசாங்கத்திற்கு வாழ்வு நீடிக்குமென அறிந்தால் கடிக்கவரும் நாய்க்கு எலும்புப்போட்டு விலகுவதுபோல அவ்வெலும்பு மதிப்புக்குங்கூட ஈடாகாத ஓர் பட்டத்தைக் கொடுத்து, தனது வலைக்கிழுப்பதிற் கிணங்கி அவ்விதப் பட்டத்தால் அதை அடைந்தவனுக்கு எக்காலத்திலும் எவ்விதப்பிரயோஜனமும் கிடைக்கப் பெருதுபோன்ற ஓர் பெயரைப் பெற்றுக்கொண்டு, தன் ஜீவனம்சையைக் கழிக்க ஞாயமானதோர் வழியுமறியாது கொலைபாதகத் தொழிலில் இறங்கிவிட நேரிடுகிறது.

• • •

இவ்வித வெளிச்சக் காரர்களின் முடிவையறியாத ஏழை ஜனங்களும் அவர்களின் அடியைப் பின்பற்றினவர்களாய், அதைவாங்கினல் நன்றாயிருக்கும், இதை வாங்கினல் இவர் மதிப்பார், எதைச்செய்தால்யார்மதிப்பார்கள் என்ற வினவிற்கு விடைபகர்வதில் புகுந்து வியாக்கியானஞ்செய்து முடிவில் தனது கஷ்ட ஜீவனத்தில் அரைவயறு கால்வயறுப் பட்டினிகிடந்து மிச்சம் பிடித்துவைத்திருந்த பணத்தை தனது வியாக்கியான விளக்கத்திற்குஇறையாக்கிபின்இதன் பயனை அடையவேண்டி பட்டுபீதாம்பர ஆபரணங்களை அணிந்து, மேல் வலியாது குஷாலாக வட்டலாத்தாய் சென்று வருகின்றோம். அற்பனுக்கு வவுசுவந்தால் அர்த்தராத்திரியில்குடை பிடிப்பான் என்பதுபோல புதிதாகதான் அடைந்திருக்கும் தோற்றத்தில் ஈடுபட்டவனுய்அதைப்பிரவிர்த்திப்பதிலேயே கவனஞ் சென்று விடுகின்றன. பின் யானையைக்கட்டி தீனிபோடுவது யாரால் முடியும்? ஆகையால் தன் நிலைமையில் தான் எடுத்துக்கொண்டமுயற்சிக்கு இறை போடமாட்டாதவனுய் தவிக்குந் தருவாயில் தன்வழியைத் திருப்புவதே புத்திசாலிகளின் கடமையாகும். இன் றேல்பணந்தேட பாவவழியிலிறங்கிவிட நேரிடும். இவ்விதமாய்கையில் கஷ்டப்பட்டவர்களில் யானும் ஒருவனே.

* * *

சொர்ணனுக்குச் சட்டியளவு என்பதுபோல் தான் உண்டு தன்மனைவி மக்களுண்டு தன் செல்வமுண்டு என தன்மட்டிலேயே திருப்தி கொண்டவர்களாய், ஆடம்பர வெளிவேஷ மில்லாதிருப்பினும், எவன் எக்கேடு கெட்டாலும் நாம் அதை வாங்கவேண்டும், இதை இப்படிவாங்க வேண்டும், அவனிடம் அதைவிடக் கூடாது, அயலான் முன்னேறினுல் நமக்கு என்ன இடையூறுவரும் என இவ்விதமாய் ஓயாக் கவலை கொண்டு இது நம் மூத்தமகனுக்கு, அது நம் இளைய மகனுக்கு, எதை நம்மகளுக்கு ஸ்திரீதனமாகக் கொடுப்போம் என்று தூக்கத்திலே வாங்குகிற மூச்சு சுழிமாறிப்போனாலும் போச்சு என்பதை அறியாது தானெத்தனையோ கோடிகாலமோஜீவித்திருக்கபோவதுபோல்எண்ணிஇதை பெண்டாட்டி பேருக் கெழுதி வாகு, அதை அயலான் பேருக்கு இருக்கட்டும், இதை இப்படி மாற்றிவை, அதை அப்படி மாற்றிவை, என மட்டிலடங்காவாறு மமதை கொண்டு மேதினியில் வாழ்வோருமுளர். இவர்கள் எண்ணியவாறு நடப்பது இவர்கள் ஆயுள்காலத்திற்குள்ளே தான் என்ன நிச்சயம்? யாமொன்றுநினைக்க தெய்வ மொன்று நினைத்திடில் அதற்குயாமென் செய்வது ? இவ்வளவும் நம் ஆயுள்காலத்திற்குள் என்றால் இனி நம் ஆயுள்காலத்திற்கு பின் எப்படியோ! இறைவனுக்கே வெளிச்சம்! இவ்விததோரணை நம்மோடேதான் என்றாலோ நம்அருமைமக்களும் நம் தகப்பனுர்தேடுகிறார் செல்வம் பொழிய! நமக்கு என்ன குறையிருக்கிறது என்று இறுமாந்து தன் ஜீவியகாலை யெல்லாம் நாசவேலையிலேயே பிரவிர்த்தித்துவிட்டு இருக்கமட்டும் உயர்ப்படியில் நின்றுவிட்டு, சந்ததிமுறையிலேயே நீர்மேற்குமிழி நிறைசெல்வமென்னும் வாக்கியத்தை மெய்ப்பித்துவிடநேரிடுகின்றது. இதனுல் ஒருதலைமுறையில் கோடீஸ்வரபிரபுவாயிருந்து அடுத்ததலைமுறையில் கோமனுண்டியாயும், ஓட்டாண்டியாயிருப்போ மறுதலைமுறையில் லக்ஷாதிபதியாயுமிருப்பதென்பது பழமொழியாகிறது. இதனுல் மனிதனுவதுஒன்றுமில்லை.

G. அருணசலம்நாடார்

நாடார்குலமித்திரன்

துந்துபி ஷு மாசி மீ 10உ

## ஹிந்துதேவஸ்தான பரிபாலன மசோதா.

நமது சென்னை மாகாணச் சட்டசபையில் தற்சமயம் ஹிந்துதேவஸ்தான பரிபாலனமசோதாவொன்று தயாரிக்கப்பட்டு அதோடு தனிக்கமிட்டியாரின் பரிசீலனையில் வைக்கப்பட்டுவிசாரணையிலிருந்து வருகிறது. அம்மசோதாவின்முக்கியநோக்கமாவது தேவஸ்தானங்களில்தற்போதிருந்து வரும் பற்பல ஊழல்களைத் திருத்திச் செவ்வையாய் நடைபெறச்செய்யவேண்டுமென்பதேயாம். அம்மசோதாவை நிறைவேற்றுவதில்பலருக்கும் ஆட்சேபனையில்லையாயினும் சிலருக்கு மாத்திரம் சிற்சில அம்சங்களில் அபிப்பிராயபேதமிருப்பதாகத் தெரிகிறது.

தேச விடுதலையின் பொருட்டு சகலவகுப்பினரும் சமூக வாழ்விலும், மதக்கோட்பாட்டிலும் சமத்துவமாயிருக்கவேண்டுமெனவிரும்பும்தேசியப்பத்திரிகைகளும் இம்மசோதாவிலுள்ள அற்ப வித்தியாசங்களைபிரம்மாதமாயெடுத்துக்காட்டி மசோதா நிறைவேறாதிருக்கும் பொருட்டு பொது ஜனங்களின் கூக்குரலைக்கிளப்பிவிட்டு வாழா விருக்கின்றன. தேசஜனங்களோ ஆங்காங்குகூட்டங்கூடி தீர்மானங்கள் செய்துமசோதா நிறைவேறாதிருக்கும் வழியைநாடுகின்றனர். விக்டோரியா மகாராணியார் மதவிஷயங்களில்ப் பிரவேசிப்பதில்லையென்று கொடுத்த வாக்குறுதிக்கு மாறாகவன்றோ வந்து விட்டதென்று மனந்தடுமாறுகின்றன. தாங்கள் தாங்கள் சுயேட்சையாயநுபவித்து வந்த சுயாலத்துக்கு பங்கம் வந்துவிடுமோ வென்றபயமேவிட்டிருப்பதாகவே தெரிகிறது. இதற்குமா குதற்கம்? ஏன் பயப்படவேண்டும். மடியில்க் கனமிருந்தால் வழியில்ப் பயமிருக்கும். மனதுட் கல்மிசமில்லையானால் மசோதாவிற்குப் பயப்பட ஏதுவுண்டாகுமா?

சென்னை மாகாணம் தென்பகுதிகளை ஆண்டுவந்த அரசர்கள், அக்காலத்தில் மதசம்பிரதாயத்தைத முன்வைத்தே அரசாண்டார்கள். ஆலயத்துக்கு அரசர்களே மேல் விசாரணைக்கர்த்தாக்களாக இருந்துவந்திருக்கிறார்கள். சமயாச்சாரியர்களுக்கும் அரசர்கள் தக்க ஆதரவு செய்து மடங்களையும் பரிபாலனம் பண்ணிவந்திருக்கிறார்கள். அரசபரிபாலனத்தில் மடங்களும் ஆலயங்களும் முக்கியபாகமாக அமைக்கப்பெற்று வந்திருப்பதால் அந்நிருவாகங்களும் சரிவர நடந்து வந்திருக்கிறது.

அதற்குப் பின்வந்த ஆந்திர தேசத்து அரசர்கள் காலம் தமிழ்மக்களிற் சிலவகுப்பினர் முற்காலஅரசர்களுக்கு செய்நன்றி மறந்தவர்களாய அன்னோர்க்கு பொல்லாங்கிழைப்பான் வேண்டி ஆந்திர அரசர்க்கு ஆதரவீந்து முதலரசர்களுக்கு துரோகம் புரிந்தனர். ஆதியரசர்களாதிக்கங்குன்றியவுடனே மடம் ஆலயம்முதலிய தருமஸ்தாபனங்கள்பல வழிகளில் மாறுதலடைந்து விட்டனவாயினும், ஆந்திர அரசர்களும் தெய்வபக்தியுள்ள இந்துக்களான [illegible] முற்கால அரசகுலத்தவர்களுக்கு ஆலயங்களிலுள்ள உரிமைகளை கொடுக்க இசைந்தபோயன்றி ஆலயஸ்தாபனங்களையாவது மதஸ்தாபனங்களையாவது கெடுக்கத் துணியவில்லை முன்னிருந்த ஆலயங்கள் பலவை பரிவிரிவாகக் கட்டியும் மிகுந்த பூமிகளை மானியங்களாக விட்டு திருவிழாக்களின் காலத்தை மாத்திரம் விருத்தி செய்து வந்திருக்கிறார்களென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. ஆந்திர அரசர்கள் தென்பகுதிக்கு வந்தரசாட்சி செய்தமையால் முன்னரசபுரிந்த வகுப்பினர்க்கு மட்டுமே கொஞ்சம் கஷ்டமேற்பட்டதேதவிர (இது உலக சகஜம்) மற்றவகுப்பினர்க்கும் இந்து மதஸ்தாபன மடம் ஆலயங்களுக்கும் புத்துயிர் கொடுக்கப்பட்டதென்றே சொல்ல வேண்டும்.

ஆந்திரர்களுக்குப் பின்வந்த மகம்மதிய ஆட்சியில் இந்துமதத்துக்குபல சஷ்டங்கள் உண்டானவாயினும் தென்பகுதிக்கு அவர்கள் வரும்போது அவர்களுடைய உக்ரம் சற்றே தணிந்து இந்தியர்கள் பால் அன்புகாட்டவேண்டுமென்றகொள்கை மேவிட்டிருந்து வந்ததால், அவர்கள் தென்பகுதிகளிலுள்ள மதஸ்தாபனங்களை அழித்துவிடத் துணியவில்லையென்று தெரிகிறது. ஆகவே தென்னாட்டரசர்கள் நிருமாணித்த ஆலயங்கள் இன்னும் சிதைந்துபோகாதிருக்கின்றன.

பின்னர் ஆங்கில அரசாங்கம் ஏற்பட்டதென்பதும் முதல் முதல் ஆங்கிலேயர் வியாபாரிகளாகவே வந்தார்களென்பதும் பின்னர் ராஜ்ய பாரத்திலாசை கொண்டு பிரிட்டிஷ் ராஜ்யம் நிலைநாட்டப் பெற்றதென்பதும் சகலரும் அறிந்த விஷயமே. மகமதியநெறுப்பு முதல் முதல் இந்தியா வெல்கையில் விழுந்தபோது இந்து மதத்தை அடியோடு பஸ்மீகரப்படுத்த வேண்டியே தன்னுடைய முழுவேகத்தையுங் காட்டப்பட்டது. அப்போது வைதீக இந்துக்களும் இந்து அரசர்களும் தங்கள் மதம் அழிந்துபோகக்கூடாதென்றே தங்கள் சக்திமுழுவதையும் பிரயோகித்து எதிர்த்து வந்திருக்கிறார்கள். இதற்கடுத்த படியில் ஆங்கில அரசுதோன்றின படியாலும் அதுவும் அந்நியமதமாயிருந்தபடியாலும் அவர்கள் ஆசார ஒழுக்க வழக்கங்களும் வித்தியாசமாயிருக்கப்பட்டதாலும் முன்னம் அடிபட்ட பயப்பிராந்தியாலும் வைதீகர்களும், வைதீக அரசர்களும் மதத்துக்கு ஹானி நேருமோ வென்றே பயந்தொதுங்கினார்கள். ஏனையோர் அவர்களை (ஆங்கிலேயர்) நெருங்கினார்கள். ராஜ்யபாரம் நடத்துவதில் சதுர்வித உபாயங்களை நன்குணர்ந்த ஆங்கிலேயர் 32 கோடி ஜனங்கள் மத்தியில் தங்களுடைய இராஜாங்கம் நிலைபெற்றிலங்க வேண்டும் பொருட்டே தாங்கள் மதவிஷயங்களில் தலையிடுவதில்லையென்று நமதுமகாராணியாரவர்களைக் கொண்டு வெளியிட்டார்கள். அதைக் கேட்டதும் பரம ஜீவகாருண்யமும் பாரபட்சமுமில்லாத நல்ல கவர்ன்மெண்டுநமக்குக் கிடைத்துவிட்டதென்றக மகிழ்ந்து, அதுமுதல் தேவாலயங்களையும்மடாலயங்களையும் அப்போது கைவசமாக்கியிருந்தவர்களை தங்கள் மனம்போன போக்கில் அநுபவித்து வரத்தலைப்பட்டு வரவர வைதீக மார்க்கத்துக்குள்ள வழிகளையனுட்டிப்பது குறைந்து, வைதீகத்துக்கு அடிப்படையாக உள்ள இலௌகிகத் துறைகளெல்லாம் பாழ்பட்டுக் கிடக்கின்றன. இலௌகிகம் வளம் பெற்றிருந்தாலன்றி வைதீகம்வளம்பெறுதென்ற மனோவுணர்ச்சியும்மாறுபட்டு விட்டன. மடங்கள் வேசியில்லங்களாயின; ஆலயங்கள் கள்ளர்கள் குலைகளாயின; ஆலயங்களிலுள்ள ஆச்சாரியர், பூசாரியர், ஆடுவோனும், பாடுவோனும், கொட்டுவோனும், தட்டுவோனும், கோயில்ச் சொத்துக்களை யெல்லாம் தங்களுக்காகவே கடவுளால் அருளப்பட்டதாகக் கருதிவேசிக்கும் தாசிக்கும் கூடத்திற்கும் கூத்திக்குங் கொடுத்து விட்டு மீதிருப்பதை தங்கள் தங்கள் பெண்டிர் பிள்ளைகளை ரட்சிக்கவேண்டி காணிபூமிகளை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். தேவாலயங்களில் தேவகருமங்கள் ஒன்றேனும் சரிவர நடப்பதில்லை. சில ஆலயங்களில் வௌவால்கள் நிறைந்து அதன் மலநாற்றம் பாசி நகரத்துள்பலநொந்து வியாதிகளையும் உற்பத்திசெய்ய ஏதுவாகின்றன. இவ்வலங்கோலத்தை சுவாமி அற்புதானந்தர் பலதடவையும் பத்திரிகைகளில் எழுதி வந்திருக்கிறார்கள்.

தெய்வமிகழேல் என்ற முதுமொழிக்கு மாறாக தேவாலயங்களில் நடப்பது நாளடைவில் மிகவிரிவுற்றதால் நாட்டில் பருவ மழைகுன்றி பஞ்சமும் பிணியும் கொலையும் கொள்ளையும் களவும் குடியும் பொய்யும்மோசமும் பொறாமையும் அதிகரித்து ஏழைஜனங்களுக்கு கஷ்டமதிகரிக்க நேர்ந்து விட்டன. மதவிஷயங்களில் இக்கொடுமையான காரியங்கள் நிகழ்வதற்குக்காரணம் நமது பூர்வீக அரசர்களும் அதன்பின் வந்த ஆந்திர அரசர்களும் மதத்தையும் இராஜாங்கத்துடன் பிணைத்து வைத்துக்கொண்டிருந்ததுபோலல்லாமல் ஆங்கிலே அரசாங்கம் மதவிஷயத்தில் இதுவரையும் ஒதுங்கிநின்றதினாலென்றே சொல்லவேண்டும். மதவிஷயத்தையும் தங்கள் மேற்பார்வையில் வைத்திருப்பார்களேயானால் மதவிஷயத்தில் இவ்வளவு கேவலம் நேர்ந்திருக்க மாட்டாதன்றோ?

இக்காரணம் பற்றியே நமது மாகாண மந்திரிமார்களால் தேவஸ்தான சீர்திருத்த மசோதாக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுவரையும் தர்மச் சொத்துக்களை ஓராங்காணியா யநுபவித்து வந்த ஒருசார்பார் மட்டுமே இம்மசோதாவை யெதிர்ப்பதாகப் பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார்கள். இவர்களுக்கு இராஜாங்க விஷயத்தில் ஐரோப்பியர்களுக் கேற்றவாறு சமவுரிமை கொடுக்கப்படவேண்டுமாம். இவர்கள் இந்துமதஸ்தாபனங்களிலவர்களுக்குள்ள உரிமையை இவர்களைப் போலுள்ள இதர இந்துக்களுக்கும் சமவுரிமை கொடுக்கப்பிரியப்படமாட்டார்களாம் ஆ! என்னகாருண்யம் தன்னுடைய ஸ்தானத்தில் யாரும் விரல்வைத்தழுத்தினால் யாருக்குமே பொருக்கமுடியாதுபோலும்! அவைபோல் மற்றவையும் மதிக்க மதிவராது போலும்! என்னே கெடுகுணம்! என்னே பொறுமை!! இக்குணக் கேடுகளை மறைத்து சிலபத்திரிகைகள் கூத்தாடுவதுங் காலக்கோலம்போலும் இதைப்பற்றி ஒரு தினசரிச்சுதேசப் பத்திரிகை மந்திரிமார்களை மனம்போனவாறு திட்டி எழுதி விட்டு பின்னும் சென்னை மாகாணமந்திரிகளுக்குப் பித்தம் தலைக்கேறியிருப்பதாகவே சொல்லுவோ மென்று பிதற்றுகிறது. மேலும் தர்மஸ்தாபனங்கள் தமிழ் நாட்டிலேயிருப்பதால் அவற்றைத் தம்மதிகாரத்துள் வைத்துக் கொள்வது கௌரவமாகு மென்ற குறுகிய நோக்கத்தோடு சென்னை மாகாண ஆந்திர பாஷாமந்திரிகள் வேலை செய்வதாகத் தெரிகிறதென்றும், தமிழர்களிடத்திலும் தமிழ் நாட்டு அபிவிருத்தியிலும் பொறாமை கொண்டு இவர்கள் இச்செய்கைக்குத் துணிந்தார்கள் எனின் இதுவும் பின்னொருகாலத்து அவர்களுக்கேட்டைத் தருமென்பதற்கு சரித்திர அத்தாட்சிகூறி வற்புறுத்த வேண்டியதில்லையென்றுங்கூறுகிறது. பிராமணரல்லாதார் அரசியில், தங்களை யறியாமலே தமிழ்நாட்டு அப்பிராமணர்கள் ஸர் பி. டி. செட்டியாருக்கு கௌரதை அதிகமாகக் கொடுத்து தங்கள் தலையிலே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டார்களென்பதற்கு இவ்விந்து தேவஸ்தானபரிபாலனமசோதாவைவிட வேறு சாட்சிவேண்டுமோ வென்றுங் கேட்கிறது. ஆகா! நியாயதோஷங்கூறி நியாயங்கற்பிக்க வெழுந்த இப்பத்திரிகை நடுநிலைமை தவறி விட்டது. [illegible]மந்திரிமார்களை தூஷிப்பதுடனில்லாது ஆந்திரமந்திரிகளென்றுங்கூறி ஆந்திராளுர்க்கும் தமிழர்கட்கும் ஒருபிரிவினையை யுண்டுபண்ணப் பார்க்கிறது. திருமலைநாயக்க ராட்சியிலும் அதற்கு முன்னுள்ள ஆந்திர அரசாட்சியிலும் தமிழ் மக்கள் அநேகருக்கும் தமிழ்த்தேவாலயங்கட்கும் செய்து வந்திருக்கும் பேருதவியையுமறந்து தமிழ்நாட்டின் அபிவிருத்தியில் பொறாமைகொண்டே ஆந்திர மந்திரிகள் இம்மசோதாக் கொண்டு வந்திருப்பதாகக் கூறும் கூற்று மிகவும் வெறுக்கத் தக்கதும் விஷமத்தனமுமுள்ளதுமேயாம்.

இக்கட்டுரைகளைக்கண்டஞ்சி நம் மாகாண மந்திரிகள் மசோதாவை நிறைவேற்றாமல் விட்டு விடமாட்டார்களென்றே நம்புகின்றோம். இவ்விஷமக்காரர்கள் இன்னுஞ்சில நாளில் அரசுரிமையே வேண்டாம் மதவுரிமையில்எங்கள்பாகத்தில்கை வைக்காதீர்கள் என்று சொல்லி தலைதப்பியது தம்பிரான் செயலென்று ஓடினாலும் ஓடக்கூடும். ஆனாலும் நமது மந்திரிகள் மனந்தளரா ஊக்கத்துடன் அம்மசோதாவை நிறைவேற்றி வைப்பார்களென்று எதிர்பார்த்திருக்கிறோம்

## குறிப்புகள்.

### நாடார் பாங்கு லிமிட்டெட்

192: ஆம் டிசம்பர் 31-தேதியோடு எடுத்து எழுதப்பட்ட மேற்படி பாங்கின் வரவு செலவுக் கணக்கின் முக்கிய விபரங்களைப் பற்றி சென்றவாரமித்திரனில் பிரஸ்தாபித்திருந்தோமென்பது நேயர்கள் அறிந்தவிஷயமே. மேற்படி வரவு செலவு கணக்கில் நாடார்மகாஜனங்களின கல்வி அபிவிருத்தியின்பொருட்டு பாங்கில் கிடைக்கக்கூடிய லாபத்தில் பத்தில் ஒரு பங்கை நாடார் மகாஜன சங்கத்திற்கு கொடுத்துக் கொண்டுவருவதாக வாக்களித்த விபரத்தைப்பற்றியே ஒரு பிரஸ்தாபத்தையும் காணோம். ஆனால், பாங்கு நிர்வாகிகள் நாடார் மகாஜன சங்கத்திற்கு பின்வருமாறு வெத்துரையான வந்தனமளிக்கிறார்கள். அதாவது:- "நமது பாங்கின் விஷயமாய் நாடார் மஹாஜன சங்கம் எடுத்துக்கொண்ட பிரயாசைக்காக, எங்கள் அன்பான வந்தனமளித்து இன்னும் ஆதரித்துவருப்படியாக கேட்டுக் கொள்ளுகிறோம்." அவர்கள் மேற்கூறியவாறு வந்தனம் அளித்தும், உள்ளன்புடன் வந்தனம் கூறியதாகத்தெரியவில்லை. ஏதோ சொல்லவேண்டிய முறைக்குத்தான் சொன்னதாகத் தெரிகிறது. நாடார் மஹாஜன சங்கம் பிரயாசை எடுத்ததாகச் சொல்லப்படுகிறதே, எந்த வகையில் எப்படி பிரயாசை எடுத்தது என்று கொஞ்சம் விரிவாக மகாஜனங்கள் அறிய தெரியப்படுத்தக் கூடாதா? பிரஸ்தாப வரவு செலவு ரிப்போர்ட்டில் நாடார் மஹாஜன சங்கத்தைப்பற்றி இவ்வளவு சுருக்கமாக பிரஸ்தாபிக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. இது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. இது விஷயமாக பாங்கு நிர்வாகிகள் வேணுமென்றே செய்திருப்பார்களென்று உறுதியாக நம்பவுமிடமில்லை. ஆனால், பாங்கு நிர்வாகிகளுக்கும் நாடார் மகாஜன சங்க நிர்வாகிகளுக்கும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார் பாங்கின் லாபத்தில் பத்தில் ஒரு பங்கை, நாடார் மகாஜன சங்கத்திற்கு கொடுப்பதில் ஒன்றுக் கொன்று மனஸ்தாபமிருப்பதாகத் தெரிகிறது. பாங்கு நிர்வாகிகள் லாபத்தில் பத்தில் ஒரு பாகத்தை நாடார் மஹாஜன சங்கத்திற்குச் சேர்த்துவிடுவதில் என்ன ஆக்ஷேபனையிருக்கிறதென்பது விளங்கவில்லை. நாடார்பாங்கின் பெரும்பாலரான அங்கத்தினர்களான நாடார் மக்கள் நாடார் மஹாஜனசங்கத்தின்மேல்த்தான் மிதமிஞ்சிய அபிமானமும் அன்பும் கொண்டிருப்பதோடு, அதனுடைய வளர்ச்சியிலும், கிளர்ச்சியிலும் வெகுவாய் ஈடுபட்டு, அது காலால்யிடும்எந்தவேலையையும் தலையால் செய்துமுடித்து, அதனுடைய அன்பிற்குப் பாத்திரமாகவெப்போதும் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதை நாடார் பாங்கு நிர்வாகிகள் மறந்துவிடக்கூடாது ஆகையால், நாடார் பாங்கு நிர்வாகிகள் பங்காளிகளுக்கு நல்ல லாபங்காட்டுவதிலேயே கிருஷ்டியுடையவர்களாயிருந்தாலுங்கூட, பாங்கின் பங்காளிகளில் பெரும்பாலோர் மஹாஜன சங்கத்தின் மேலுள்ள மிதமிஞ்சிய அபிமானத்தைக் காட்டிக்கொள்ளஇப்படிப்பட்டநேரங்களில் பின்வாங்க மாட்டார்கள் என்பதை அறிந்து,மகாஜன சங்கத்திற்கு சேரவேண்டிய பாகத்தை கொடுத்தோ, இனி கொடுக்கவேண்டியதற்காக சமாதானத்தை சொல்லியோ மஹாஜன சங்க நிர்வாகிகளை திருப்திசெய்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இதுவரையும் காலங்கடத்திவந்ததுபோல் இனியும் மஹாஜன சங்கத்திற்கு சேரவேண்டிய பாகத்தை, நாடார் பாங்கு நிர்வாகிகள் கொடுக்காமல் காலங்கடத்துவார்களானல் மஹாஜனங்களுக்கு பாங்குமேல் தப்பபிப்பிராய முண்டாகும் என்பதை அவர்கள் அறியவேண்டுமென்றுவற்புறுத்துகிறோம்.

---

# மதிப்புரை.

### 'மிதவாதி' (The Mitavadi)

இஃது கேரள தேசத்திலிருந்து வெளிவரும் வாரப்பத்திரிகை. இது சுதேச பாஷையில் பதிப்பிக்கப் படுகிறதாயினும், ஆங்கிலேயத்திலும் முக்கியமான பொது விஷயங்கள் வெளியிடப்படுகின்றன. இதில் நாடார் குலத்தவர்களின் முன்னேற்றத்தின்மேல், அதிக அபிமானமும் அன்புங்கொண்டு அடிக்கடி பல விஷயங்கள் பதிப்பிக்கப்படுவதை ஈண்டு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை இதன் பத்திராதிபர் மிஸ்டர் C. கிருஷ்ணன் B. A. B. L. High court Vakil இதன் வருட சந்தாரூ 7—0—0

விலாசம் பத்திராதிபர்.
"மிதவாதி"
லக்ஷிமிவிலாசம்
கள்ளிக்கோட்டை.

• • •

### கங்கைக்கரை குகராஜன் வம்சத்து "குக வேளாளர்"

இம்மகுடம்புனைந்த புத்தகப்பத்திரிகையின் ஆரம்பம் முதல் பிரதிகிடைக்கப் பெற்றிருக்கிறோம். இஃது திருச்சிஜில்லா திருவானைக்கோவில் போஸ்டு உத்தமச்சேரி போர்டு ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் பெ. பரிமணம் பல்லவராயரவர்களால், பரோபகாரச் சிந்தனையுடன் தனது குலப் பெருமையை விளக்குவான்வேண்டி வெளியிடப்படுகிறது. நம் தேயத்தில் தற்காலத்தில் பற்பல ஜாதியார்கள் பூர்வத்தில் மேம்பாடடைந்தவர்களாயிருந்திருந்தும்காலமாறுபாட்டினால் சிலர் தங்கள் குல தர்மத்திற்கும் குலப் பெருமைக்கும் அடுக்காத நிலைமையிலிருப்பதைக் கண்டவுடனே கண்டதே காக்ஷி கொண்டதேகோலம் என்று எண்ணும்போலிகள் தங்கள்குலம் எத்தன்மையுடையதாயிருந்தாலும் அதைக்கவனியாது பிறர்குற்றம் நாடும் இயல்புடையவர்களாய் வாய்மதமேறி பேசும் பேச்சைக் கண்டித்து அவர்க்குண்டான அறியாமையை அகற்றவும் நல்லஅறிவை புகட்டவும் தன்குலப்பெருமையை நிலைநாட்டவும் இப்பத்திரிகை ஆசிரியர் கங்கணங்கட்டிக்கொண்டு உழைத்து வருவதைப் பாராட்டிச் சந்தோஷிக்கின்றோம். இப்பத்திரிகையில் நாடார் குலத்தவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டி, தம் குலத்தவர்களும் அவ்வாறு முன்னேற்றமடையவேண்டுமென்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது, ஆனல், தமிழ்நாட்டின் தென்பகுதிகளிலுள்ள இரண்டொரு சாதியார்கள் நாடார்குலத்தவர்களின் முன்னேற்றத்தின் மேல் பொறாமை கொண்டு, நம்மும் நாடார்களைப்போல் முன்னேற வேண்டுமென்று வெளிக்குப் பகட்டுரைசெய்துகொண்டு கிராமாந்திரங்களில் நாடார்களுக்கு யாதொரு செளக்கியம் வாய்க்கல்செய்யக்கூடாதென கட்டுப்பாடுசெய்யும் கர்வம்பிடித்த முண்டங்களுக்கு நாம் என்ன சொல்லுவது? அதற்கு பகவான் பரிகாரம் செய்யாமலுமில்லை. அதாவது: இந்த படித்த முழுமுண்டங்களின் போதனையினால் அக்குலத்தவர்கள்- இதற்குமுன் மற்றவர்களிடத்தில் கொண்டிருந்த நட்பை இழக்கநேரிடுவதோடு, பொறாமை, பொய் முதலிய தீய்க்குணங்களும் அவர்களுக்கு புதிதாய்உண்டாகிறது. இதன் பயனாக, கலகமும் குழப்பங்களும் முண்டாகிறதினால் நஷ்டமும்கஷ்டமும்ஏற்பட்டதுதான்மிச்சம். இதை உற்றுநோக்க அன்னநடை நடக்கப்போய் தன்னடையும் போனது போலாகிறது என்பதை ஈண்டு குறிப்பிடற்பாலது. இத்தகைய போலிக்குணங்களை கைக்கொள்ளாமல் நங்கள் குலத்தை முன்னேற்றவேண்டி, உழைத்துவரும் முத்துராஜ மகாஜன சங்கப் பத்திரிகை, 'கங்கைக்கரை குகராஜன் வம்சத்து வேளாளர்' பத்திரிகை முதலியவைகள் என்றென்றும் இத்தரணியில் தளரா ஊக்கத்துடன் உழைத்துவரப் பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

• •

### மலையாள தேசத்து குத்தகைதார் மகாநாட்டின் 1922-ஆத்து ரிப்போர்ட்டு (The Report of The Malabar Tenants' Conference, 1922.)

டை கான்பரன்ஸின் நடவடிக்கைகள் ஆங்கிலேய பாஷையில் பதிப்பிக்கப்பட்ட புத்தகபிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். அதில் டை கான்பரன்ஸ் 1922ஆ-த்தில் டிசம்பர்மீ 29 தேதியில் பத்தாம்பில் சென்னை கனம் C. R. ரெட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ்கூடி தீர்மானிக்கப்பட்ட முழு விபரங்களும் நடபடிக்கைகளும் அடங்கியிருக்கிறது. இந்தக்கான்பரன்ஸ் நிலச்சுவான்தார்களின் ஆதிக்கத்தின் அநியாயத்தை அகற்றி புறக்குடிகளின் குறைகளை நிவர்த்திப்பதற்கே முக்கியமாய் கூட்டப்பட்டது. இதன் நன்நோக்கத்தை எல்லாம்வல்ல இறைவன் பூர்த்தி பண்ணிவைக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

## சட்டசபை தேறுதல்.

நம்மவர்கள் வசிக்கும் கிராமங்களில் பெரும்பாலோர் சட்டசபையில் நமது பிரதிநிதி ஒருவரிருப்பதை ஒருவாறு அறிந்திருப்பார்களாயினும் அதுபற்றியமுழுவிபரத்தையும்அறிந்திருக்கமாட்டார்கள் என்றே எண்ணவேண்டியதிருக்கிறது.ஏனெனில், கிராமங்களிலுள்ள வோட்டர்களே இன்னும்லிஸ்டில்கட்டுப்படவில்லை. இது கவர்ன்மெண்ட் அதிகாரிகளுடைய தப்போ அல்லது நமது மஹாஜன சங்கத்தாரின் பிரசாரக்குறைவினலோ தெரியவில்லை. இன்னின்னர் வோட்டர்களாகக் கூடுமென்றும் வோட்டர்களாகத் தகுந்தவர்கள் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ள இன்ன இடத்திற்கு மனுச்செய்து கொள்ளவேண்டுமென்றும் நாடார்மஹாஜன சங்கத்தார் உடனுக்குடன் பத்திரங்கள் மூலமாகவும், பிரசாரகர்கள் மூலமாகவும் பிரசாரஞ் செய்யவேண்டியது அத்தியாவசியம்.

நிற்க, தற்சமயம் சட்டசபையில் வீற்றிருந்து நமக்காகச் சேவைபுரிந்து வரும் கனம் W. P. A. சௌந்திரபாண்டிய நாடாரவர்களை அடுத்தசட்டசபைதேறுதலுக்கு எந்த ஜில்லாவுக்கு அபேக்ஷகராய் நிற்கச் சொல்லுவதென்பது கவனிக்கத்தக்கது. கனம் நாடாரவர்களின் குணாதிசயங்களைப் பற்றி நமது மித்திரன் மார்கழிமீ 7 தேதி தெளிவாய் எழுதினதையும் நேயர்கள் அறிந்திருப்பார்களாதலால் அவைகளை இங்கு விஸ்தரிக்காமல் விடுத்தனம். இவ்வளவு காலமும் சட்டசபையிலிருந்து நமக்காக ஊழியஞ் செய்த கனம் நாடாரவர்கள் நங்குலத்தினருக்குச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை மற்றெவரையும்விட ஒருவாறு அறியக்கூடும். இம்மூன்றுவருஷ அனுபோகமும் வாய்ந்தவர். பொது ஜனங்களுக்காக சட்டசபையில் கேள்விகள் மூலமாகவும் தம்முடைய உயர்ந்த பதவியின் மூலமாகவும் அநேகஉதவிபுரிந்து வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். மேலும் செல்வாக்கும், கவர்ன்மெண்டார் பார்வையில் நற்சிந்தையும் நற்கீர்த்தியும் பெற்றவர்கள். தவிர சட்டசபையிலமர்ந்திருக்கும் இதரபிரதிநிதிகளின் சிநேக பான்மையும் பெற்றிருக்கிறார். ஆகலான் அவர்களையே வரப்போகிற எலெக்ஷனுக்கு திருநெல்வேலி ஜில்லாவுக்குப் பிரதிநிதியாக நிற்கக்கேட்க வேண்டியது தக்ஷணநாடார்கள்அன்பால்விழுந்த முதற்கடமையாகும். ஏனென்றால் திருநெல்வேலி ஜில்லாவில் அபேக்ஷகராக நின்றால்தான் வெற்றிபெறுவது நிச்சயம். ஆகையால் திருநெல்வேலி நாடார்களனைவரும் ஒருங்குசேர்ந்து கனம் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடாரவர்களை நமது ஜில்லாவுக்கு அழைத்து சுற்றுப்பிரயாணம் செய்வதுமல்லாமல் நம்மவர்களிய பிமுகர்களுக்கு அறிமுகஞ்செய்துவைத்து, திருநெல்வேலி ஜில்லாஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நிற்கும்படி கேட்டுக்கொள்வது அவசியம். நம்மவர்களுக்குள் பிளவுகளேற்பட்டு, மறுபடியும் ஏமாந்துபோகாமல் "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" யென்பதை நிலைநிறுத்துவீர்களாக.

ஞா. பா. வேதநாயக நாடார்

---

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

பணமுடையை உத்தேசித்து சிறிது காலம் வி. பி. போடாமல் நிறுத்தி இருந்ததை நேயர்கள் அறிந்திருக்கலாம் மறுபடியும் மாசி 15உ தேதிக்கு மேல் வி. பி. யில் மித்திரனை அனுப்ப உத்தேசித்திருக்கிறோம்ஆகையால் மித்திராபிமானிகள் வி. பி. யைஎதிர்பார்த்திருந்து பத்திரிகையை பெற்றுக்கொள்ளும்படிவேண்டுகிறோம்

மானேஜர்.

# ஐரோப்பியவர்த்தமானம்

## ஜெர்மானியர்களின் சாத்விகப் போராட்டம்.

### பிரான்ஸின் பிடிவாதம்.

நமது மித்திரன் சென்ற இதழில் துருக்கியும் நேசதேசங்களும் நடந்துகொண்ட மாதிரியை எழுதினோம், இறுதியில் சமாதானம் செய்யப்போன இடத்தில் (லாசேன் மகாநாட்டில்) பழையபடி சச்சரவக்குள்ளாகி, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடாமலே பிரதிநிதிகள் தத்தம் ஊர்க்கு திரும்பிவிட்டார்கள். அதை கவனிக்குங்கால் ஆனைகட்டப்போன இடத்தில் சேனைப் பூத்துகொண்டுவந்தது போலவே இருக்கிறது. உலகத்திலேயே நாகரீகத்தில் சிறந்தசாதியார்கள் என்று சொல்லிக்கொள்ளுவோர்களும், அப்படியே எண்ணப்படுவோர்களுமான நேசதேச இராஜதந்திரிகள் தங்களுக்குள்ள அபிப்பிராய பேதத்தை ஒழித்து, சமாதானத்தை நிலைநிறுத்த வந்தவர்கள், அபிப்பிராய பேதத்தை அதிகப்படுத்திக்கொண்டு, யாதொரு பிரயோசனமுமடையாதபடிசெய்துகொண்டது ஆச்சரியமான காரியமே. இதுதான் நாகரீகம்போலும்! கேவலம் காட்டுமிராண்டிகள்கூட சண்டைசெய்து ஓய்ந்தால், பின் சமாதானத்துடன் தங்கள் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளவேண்டிய மாதிரியில் தங்கள் அறிவை ஸ்திரப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அத்தன்மைகூட யில்லாமல், மாறி மாறி, அபிப்பிராய பேதத்தை கிளறிக்கொண்டேயிருப்பது,நாகரீகம்வாய்ந்தவர்கள் நாங்கள் தான் என்று சொல்லிக் கொள்ளுவோர்களுக்கு அழகாகுமா? இனியாவது உலகம் சிறிது காலத்திற்கு சண்டையில்லாமல் சமாதானத்துடனிருந்து வாழும்படி செய்யக்கூடாதா? ஒவ்வொரு தேசத்திலும் பொருளாதார நிலைமை மிகக்குன்றி, வேலையில்லாதவர்கள் கூட்டம் அதிகரிக்கவும், பஞ்சம் பிணி முதலியவைகளால் மக்கள் படுந்துயரத்திற்கும் கணக்குண்டா? இத்துடன் ஒவ்வொரு தேசமும் கடனில் ஆழ்ந்து கண்மூக்குத் தெரியாமல் திணறிக்கொண்டும் தத்தளித்துக்கொண்டும் தன்நிலைமைதெரியாமல் தயங்கிக்கொண்டிருக்கின்றன. தரித்திரமிருந்தால், தன்னிலைமையறிய சக்தியில்லாமல்போகும் என்பது மெய்யாகி விட்டது. ஜனப்பிரதிநிதிகள் என்றும் தேசப்பிரதிநிதிகள் என்றும் சொல்லிக்கொண்டு, உலகம் எதிர் நோக்கிக்கொண்டிருப்பதையும், தங்கள் தேசத்தின் நிலைமையும் கவனியாமல், சண்டைக்கு ஆரம்பிப்பார்களென்றால், நாகரீகம் வாய்ந்தவர்கள் யென்றாவது,ஜனப்பிரதிநிதிகள் என்றாவது எப்படி நினைக்கமுடியும்? யுத்தம் நடக்க நேரிட்டால் ஏழைமக்கள் தான் கஷ்டப்படவேண்டியதிருக்குமென்பதை அவர்கள் மறந்துவிட்டது விசனிக்கத்தக்கது. இம்மட்டோ? பிள்ளையாரைப் பிடித்தசனி அரசமரத்தையும் பிடித்ததுபோல் ஆசாமிகளுக்கு அப்பால் இருக்குமா? நமக்குமல்லவோ அதன்பயனாக அநேககஷ்ட நஷ்டங்கள் நேரிடும்.

• • •

### பாரிஸ் மகாநாடு.

நாம் மேலேகூறியபடி லாசேன் மகாநாடு நடந்து கொண்டிருக்கும்போதே பிரான்சுதேசத்து தலைநகரான பாரிஸில் ஒரு மகாநாடுகூட்டி, ஜெர்மன்நஷ்டஈடு விஷயமாய் ஆலோசனை செய்தார்கள். இந்த பாரிஸ் மகாநாட்டிற்கு பெரும்பாலும் நேசதேச பிரதம மந்திரிகள் விஜயஞ் செய்திருந்தார்கள். பேராசையும், அவநம்பிக்கையும் சுயநலமும் அகங்காரமும் தாண்டவமாடும்போது சமாதானம் நிலைபெறுவதுஎங்ஙனம்? மகாயுத்தத்திற்கு பிற்பாடு வேர்ஸெயில்ஸ் உடன்படிக்கைப்படி, ஜெர்மனி நேசதேசங்களுக்கு பெருவாரியான நஷ்டஈடு செலுத்தும்படிஏற்பட்டது. ஜெர்மனியும் சமாதான நிபந்தனைகளுக்குட்பட்டு, சிறிது காலம் தவணைதவருமல் செலுத்திவந்ததாயினும், தேசத்தில் பொருளாதாரநிலைமை குன்றியதினாலும் தனது சக்திக்கு அதிகப்பட்ட நஷ்டஈட்டை செலுத்தும்படி கட்டாயம் ஏற்பட்டதினாலும், தவணைப்படி செலுத்தத் தவறிவிட்டது. ஜெர்மனியின் உண்மை நிலைமையை அறிந்தபிரிட்டிஷாரும்அமெரிக்காவும்ஜெர்மனியின் திக்கற்ற நிலைமைக்கு சிறிது இரங்கி, அனுதாபப்படுகின்றன. ஆனால், பிரான்சு, பெல்ஜியம், இட்டாலிமுதலிய தேசங்கள்,ஜெர்மனிவேணுமென்றேநஷ்டஈட்டைசெலுத்தமறுக்கிறது,சக்தியில்லாமல்போகவில்லைஎன்றுவாதிக்கின்றன. மேலும்ஜெர்மனிவேணுமென்றேநிலக்கரிமரம்தவணைப்படிசெலுத்தமறுத்துவிட்டபடியினால், உடனே ஜெர்மனிக்குச்சொந்தமான ரூர்பிரதேசத்தைபிடித்துக்கொள்ள பிரான்சு வற்புறுத்திற்று. ஆனால், ஜெர்மனியின் சக்தியின்மைக்காக சிறிது தாராளமாக விட்டுக்கொடுத்து இன்னும் தவணை நீடிக்கச்செய்தால் நலமாயிருக்குமென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் போனர்லா டை மகாநாட்டில் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் பயன்படாமல் போனதுபற்றி, மிஸ்டர் போனர்லா மகாநாட்டிலிருந்து பிரிந்துகொண்டு வந்துவிட்டார்.

• • •

### பிரான்ஸின் பிடிவாதம்.

பிரான்சும் ஜெர்மனியும் ஒன்றுக்கு ஒன்று அடுத்த ராஜ்ஜியங்கள். இரண்டும் வல்லரசுதான். ஆகையால், மகாயுத்தம் ஏற்படுவதற்கு முன்னமே எல்லைத்தகரால் விஷயமாய் ஒன்றுக் கொன்று மனத்தாங்கல் இருந்திருப்பதாகவும் தெரிகிறது. அப்படியே ஒன்றுக்கொன்று வருத்தம் இல்லாவிட்டாலும், மகாயுத்தத்தின் போது ஜெர்மானியர்கள்பிரான்சுக்கு விளைவித்த கஷ்டநஷ்டங்கள்கொஞ்சமல்ல. இந்த நேரத்தில் அந்தக்காட்டமாவது பிரான்சக்குஜெர்மானியரிடத்தி லில்லாமல் போகாது. அந்த பகையைத் தீர்த்துக் கொள்ள இது நேரமில்லை என்பதுதான் உலகத்தார் கோரிக்கையும் விருப்பமும். ஆயினும் பிரான்சு ஓரே பிடிவாதமாய், ஜெர்மனிமேல் பழிதீர்த்துக்கொள்ள எண்ணிவிட்டது. இதனால்தான் பிரான்சு உலகவசைச் சொற்களுக் காளாகும்படி நேரிட்டது.

• • •

### பெல்ஜியம்.

ஒத்துக்கு மத்தளமடிப்பதுபோல பெல்ஜியமும், இத்தாலியும், பிரான்ஸின் கொள்கையை ஆதரித்து நிற்கின்றன. பெல்ஜியம் மகாயுத்தத்தின்போது ஜெர்மானியரிடத்தில் பட்டபாட்டை உலகம் நன்றாய் அறிந்தது தானே! இயலாதவனைக் கட்டிப்பிடிக்க இருபது பேர்கள் கூடிக்கொண்டு திண்டாடுவதுபோல, இதுதான் சமயமென்று பெல்ஜியமும் தனது கோபத்தைஜெர்மானியரிடத்தில்காட்டிக்கொள்ள கச்சைகட்டிக்கொண்டு நிற்கின்றது.

(6-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பிரான்ஸின் படைஎடுப்பு.

பிரான்சு ஆராய்ச்சியில்லாமல் படை எடுத்துப்போய் ரூர்பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டது. பெல்ஜியமும் பிரான்ஸைப் பின்பற்றி தொடருகிறது.

• • •

## ரூர் பிரதேசம்.

ரூர்பிரதேசமானது ஜெர்மனிக்கு சொந்தமானதும் பிரான்சுக்கு பக்கத்திலிருப்பதுமான ஒரு முக்கிய பிரதேசம். இப்பிரதேசத்தின் மேல் பிரான்சு எப்போதும் கண்போட்டுக்கொண்டிட சமயத்தையும் ஒரு போலி சாக்கையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. என்னவெனில், ரூர்பிரதேசத்தை ஜெர்மனியின் ஷிருதயம் என்று சொல்லலாம். ஜெர்மனிக்கு வேண்டிய சகல கைத்தொழில் சாமான்களும், அநேக சுரங்கங்களும் இப்பிரதேசத்தில்தான் இருக்கின்றன. நிலக்கரி இப்பிரதேசத்திலிருந்து ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ரூர்பிரதேசம் பிரான்சு கைவசமானால், உலகத்திலேயே கைத்தொழிலே உருவாகிவந்தாற்போன்ற ஜெர்மனிக்கு மகத்தான அழிவு ஏற்படும். அதன் பயனாக ஐரோப்பாவின் நிலைமையே, சீர்குலைந்துபோகுமென்பதில் சந்தேகமில்லை எனப்படுகிறது. ஜெர்மனி ... மகாயுத்தத்தின்போது செய்யா துர்க்கிருத்தியங்களும், அநீதிகளும் உலகம் ... படி செய்தது ஒருபுறமிருந்தாலும், ஜெர்மனியாரிடத்தில் அரிய கைத்தொழில் முயற்சியிருக்கிறதாலும், நான்கு வருடம் தொடர்ந்து சண்டைசெய்து சலித்துப்போய் இளைப்பார வேண்டியதையும் கவனியாமல், உலகம் நான்கு வருடம் கைத்தொழில் சாமான்களுக்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததை ஒரு வருடத்திற்குள், மகாயுத்தத்திற்கு முன்னிருந்ததுபோல கைத்தொழில் சாமான்களின் அகவிலை கிராக்கியை மலியவைத்ததினாலே, உலகத்தோருடைய மிதமிஞ்சிய அபிமானமும், அன்பும்வாஞ்சலியமும் ஜெர்மனியை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறது. இதை உண்ணியே உலகத்தார் ஜெர்மனிக்கு ஒரு கெடுதிவந்தால் தங்களுக்கு வந்ததுபோல எண்ணிக்கொண்டு ஜெர்மனியர்களுடன் பிரான்சு யுத்தத்திற்கு இறங்குவது அநீதி என்று உலகம் ஒருதலைப்பக்ஷத்துடன் கூக்குரல் யிடுகிறது.

• • •

## ரூர்பிரதேசத்தின் நிலைமை.

### அங்குள்ள ஜெர்மனியர்களின் மனோ நிலைமை.

பெல்ஜியக்காரர்பிரான்சுக்காரர்களுக்கு ஒத்திருந்து ரூர்பிரதேசத்தைபடை எடுத்துக்கைப்பற்றிக்கொண்டு, ஏராளமான துருப்புகளை அப்பிரதேசத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அநேகமுக்கிய நகரங்களையும், பட்டணங்களையும் இராணுவப்பலத்தால் கைப்பற்றிக் கொண்டார்கள். தங்கள் ஆதிக்கத்தை மீறி நடப்பவர்கள், தங்கள் இராணுவக்கோர்ட்டில் விசாரிக்கப்படுவார்கள் என்று கட்டளை யிட்டார்கள். அதன்படி இராணுவக்கோர்ட்டுகள் பல அமைத்துக்கொண்டார்கள். அப்பிரதேசத்திலுள்ள தொழிலாளர்கள் பிரான்சுக்கு விரோதமாய் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அங்குள்ள ஜெர்மனியர்கள் தேசியப்பாட்டைப் பாடிக்கொண்டு, அநேக பிரசங்கங்கள் செய்கிறார்கள். தங்களுடைய அகக்கொதிப்பை வெளிக்குக் காட்டிக் கொண்டாலும் காரியத்தில் பலாத்காரமில்லாமல் சாத்வீகமாய் நடந்துகொள்ளுகிறார்கள். பிரான்சுக்கு விரோதமாய் ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ்செய்கிறார்கள். வண்டிகள் வாடகைக்கு கிடைப்பதே மகாகஷ்டமாயிருக்கிறது. அநேக தொழிலாளர்களும், முதலாளிகளும் கைதிசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். ஜனங்கள் பிரான்சுக்கு விரோதமாய் சாத்வீகத் தன்மையுடன் இருக்கிறார்கள்.

• • •

## ரூர்பிரதேசத்தை பிரித்துவிட்ட விபரம்.

பிரான்சுக்காரர்கள் ஏராளமான படையைத் தருவித்துக்கொண்டு, ரூர்பிரதேசத்தைஜெர்மனியினின்றும்பிரித்துக்கொண்டு, ஜெர்மனிக்கும் ரூர்பிரதேசத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல்செய்துவிட்டார்கள். அங்குள்ள சுரங்கங்களிலே வேலை நிறுத்தம் செய்வோர்களுக்கும் ரயில்வேயில் வேலைசெய்ய மறுப்போர்களுக்கும் பதிலாகத் தங்கள் தேசத்திலிருந்து தொழிலாளர்களை தருவிக்கிறார்கள். இதனால் ரூர்பிரதேசத்தில் வேலையில்லாதார் கூட்டம் அதிகரிக்குமென்று குறிப்பிடவேண்டியதில்லை. இப்படி ரூர்பிரதேசத்தை தனியாகப் பிரிப்பது அநியாயமென்பதற்குபிரான்சுக்காரர்கள், தங்கள் நஷ்டஈடுபூர்த்தியாகும்வரை ரூர்பிரதேசம் தனியாகத்தான்யிருக்கவேண்டியதிருக்கிறது என்று தைரியமாக பதில் சொல்லுகிறார்கள்.

• • •

## ஜெர்மனி.

உலகமெல்லாம் திரண்டு தன்னைநோக்கி நான்கு வருடகாலமும் உக்கிரமாகச் சண்டைசெய்த போதிலும் சலியாமல் எதிர்த்துநின்று, எதிரிகள் ஓடஓட நடுக்க நடுக்க, வெருள வெருள, மயங்க மயங்க, கிரங்க கிரங்க, தினரத் தினர, தயங்க தயங்க தேசதேசங்களெல்லாம் தத்தளிக்க யுத்தஞ்செய்த ஜெர்மனியின் அபாரமான சக்தியை இப்போது மறந்துவிட முடியாது. மகாயுத்தத்தின்போது தனது ராஜ்ஜிய எல்லைக்குள் ஒரு மயிர்க் காலுக்குங்கூட சேதம் விளைவிக்கப்படாமல் காத்த ஜெர்மனியானது தனது வல துசேத்திரம்போன்ற ரூர் பிரதேசத்தில் பிரான்சுக்காரர்கள் சூழ்ந்து கொண்டபோது சண்டைக்குப் போகாமல் அவர்கள் செய்வதைப்பார்த்துக்கொண்டு சாத்வீகத்தன்மையுடனிருப்பது ஆச்சரியமாய்த்தானிருக்கிறது. அழுகிறவன் சிறித்தாலும், சிறிக்கிறவன் அழுதாலும், சண்டை செய்கிறவன் சாத்வீகத்தை கைக்கொண்டாலும் உலகத்தில் விபரீதம் ஏற்படும் இதனால் என்ன விபரீதமேற்படப்போகிறதோ! நமது பாரத நாட்டில் காந்தியடிகள் காங்கரஸ்வாதிகளுக்கு தலைமைவகித்து கடந்தஇரண்டு வருடங்களாக நடத்திவந்த இயக்கத்தின் பயனாக, நாட்டில் சாத்வீக அலை வீசியது. ஆனால், காங்கரஸ்வாதிகளில் பெரும்பான்மையோர்களுக்கு அதில் நம்பிக்கை யில்லாமல் குருட்டுத்தனமாகத் தான்பின்பற்றியிருந்திருக்கிறார்களென்பது கயாக்காங்கரஸ் முடிந்தஉடனேவெளியாகிவிட்டது. சாத்வீகத்தில் நன்நம்பிக்கை கொண்டவர்களும் இந்திய போர் வீரர்களில் மிகவும் கீர்த்திபெற்றவர்களுமான சீக்கியர்களே சாத்வீகப்போராடி ஜெயம்பெற்றார்கள். ஆனால், அதைஉபதேசம்செய்தமகாத்மா காந்தியடிகள் அதன்பயனைக்காணமுடியாமல்சிறையிலடைப்பட்டிருந்ததுவிசனிக்கத்தக்கதே அதுபோல சதாயுத்தத்தில் பிரியமுள்ளஜெர்மனியர்களும் சாத்வீகத்தை கைக்கொண்டது ஆச்சரியமாய்த்தான் யிருக்கிறது. தற்சமயம் ஜெர்மனியர்கள் அநேக கஷ்டங்களுக்குள்பட்டு சாத்வீகத்தன்மையுடன் இருக்கிறார்கள். இவர்கள் கடைசிவரையும் இப்படியே இருப்பார்களானால் இனி உலகத்திலே சண்டையில்லாமல் போகும் என்பது நிச்சயம்.

## பர்மா

## வர்த்தமானம்.

### பர்மாபால்யநாடார் சங்கத்தின் கல்வி அபிவிருத்திசங்கம் சார்பாக ஓர் பொதுக்கூட்டம்.

காலது ஜனவரி௴ 31௳ புதன்கிழமை இரவு 6½ மணிக்கு ஷை சங்கசார்பாக 'நாடார்குல மித்திரன்' பத்திராதிபர் ஸ்ரீமான் S. A. முத்து நாடாரவர்களுக்கும், கௌரவமானேஜர் ஸ்ரீமான் T. கருப்பையா பிள்ளை யவர்களுக்கும் வந்தனோபசாரம் செய்வதற்காக ஓர் பொதுக்கூட்டம் "பர்மா நாடார் மகாஜன கிளைசபை" கட்டடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் விஜயம்செய்த முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான்களான வை. மு. முத்துக்குமார நாடாரவர்கள் J. ஜோசப் நாடாரவர்கள், M. A. B. L. P. S. P முத்தையா நாடாரவர்கள், L. M. சுவாமிதாஸ் நாடாரவர்கள், தர்மராஜ நாடார் B. A. B. L., அ. இருளப்ப நாடாரவர்கள், ரா. திருவடி நாடாரவர்கள், அ. ஜாண்முத்தையா நாடாரவர்கள், தெ. பெ. மரியராயப்ப நாடாரவர்கள், N. சாமுவேல் நாடாரவர்கள் மற்றும் பல கனவான்களும் பால்ய குலாபிமானிகளுமாக சபையில் குழுமியிருந்தனர். பிரபல வர்த்தகரும், "இந்து நாடார் மகாஜன சபை" மானேஜரும், "பர்மா நாடார் மகாஜன கிளைச்சபை" வைஸ்பிரஸிடெண்டும், தயாளகுணசீலருமாகிய ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமார நாடாரவர்கள் அவைத்தலைமை வகிக்குமாறு ஷை சங்க ஜெனரல் செக்ரட்டெரி மிஸ்டர் S.P.G சிகாமணிநாடார் பிரேரேபனைசெய்ய, மிஸ்டர் M. டொன்ஜு மிஆமோதிக்க பலத்தகரகோஷத்தினிடையே அன்னவர்கள் தலைமை வகித்தார்கள். உடனேசபாநாயகரவர்களுக்கும், கனம் மித்திரன் அதிபரவர்களுக்கும் கனம் கௌரவமானேஜரவர்களுக்கும், ஸ்ரீமான்களான G. ஜோசப் நாடார், P. S. P. முத்தையா நாடார், L. M சுவாமிதாஸ் நாடார், தெ. பெ. மரியராயப்ப நாடார் முதலிய கனவான்களுக்கு ரோஜா புஷ்பமாலைகள் ஜெனரல் செக்ரட்டேரி மிஸ்டர் S. P. G. சிகாமணியால் சூட்டப்பட்டு, பன்னீர் தெளிக்கப்பட்டது. (கரகோஷம்) அக்கிராசனர் முகவுரை கூறியதும் கடவுள் வணக்கம் ஜோதிட வித்துவான் ஸ்ரீமான் ஆ. அருணாசல நாடாரவர்களால் பாடப்பட்டது பின்னர் சங்கவாழ்த்துதலும் கனம் பத்திராதிபரவர்கள் பேரிலும், கனம் பிள்ளையவர்கள்பேரிலும் வாழ்த்துதலும், கனம் ஜோதிடம் ஆ. அருணாசல நாடாரவர்களாலும் மிஸ்டர் அ. பெரிய நாடாரவர்களாலும், மிஸ்டர் K. சுப்பையாவாலும் வெகு இனிமையாயும் கேட்போர் மனதை கவரத்தக்க வண்ணம் பாடப்பட்டது.

அதன்பின் சங்கக் காரியதரிசி மிஸ்டர் K. முத்தையா நாடாரவர்கள் கனம் பத்திராதிபரவர்களுக்கும் கனம் கௌரவமானேஜரவர்களுக்கும், வரவேற்பு வந்தனோபசாரப் பத்திரம் படித்துக்கொடுத்தார்கள். இவ்விஷயத்தில் முக்கிய குறிப்பு என்னவென்றால் ஷை சங்கத்தார் நமது 'மித்திரன்' க்ஷேமநிதிக்கு தங்கள் சங்கத்தின் பேரால் ரூ 20 நன்கொடையாக கொடுத்தார்கள். பின்னர் கனம் பத்திராதிபரவர்கள் வரவேற்பு பத்திரத்திற்குப்பதிலளிக்க விரும்பி ஷை சங்கத்தார் செய்த நன்றிக்கு உபசாரம் கூறி ஷை சங்க வேலைகளை சிலாகித்தும் பால்ய நாடார்களின் மனோ பாவனையே சமதாயிற்காலமுற்போக்குக்குஅறிகுறியாகும் என்பதையும் பால்ய நாடார்கள் செய்யவேண்டிய வேலைகளையும், வெகு தெளிவாயும், விரிவாகவும் எடுத்துரைத்து ஷைசங்கத்தாருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றும், சுவாமி விவேகானந்தரவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் பத்தும் ஆகபுத்தகம் 11 (பதினொன்று) நன்கொடைசெய்து, சுவாமி விவேகானந்தரின் கொள்கையையும், அரியஊழியத்தையும் எடுத்துரைத்து ஷை புத்தகங்களை பால்ய நாடார்கள் நன்கு வாசித்து பயனடையுமாறு கேட்டுக்கொண்டார்கள். உடன் ஸ்ரீமான் A. ஜாண் முத்தையா நாடாரவர்களால் கனம்அதிபரவர்களுக்கு மாலைசூட்டப்பட்டது. பின்னர் மித்திரன் கௌரவமானேஜர் கனம் T. கருப்பையா பிள்ளையவர்கள் எழுந்து வந்தனோபசாரப்பத்திரத்திற்கு பதிலளித்துவிட்டு "கல்வி" என்ற விஷயமாக சாங்கோப சாங்கமாய் சபையோர் குதூகலமடையும் வண்ணம் பேசினார்கள்.

பின்பு பர்மா நாடார் மகாஜன சங்கக் காரியதரிசியும், தமிழ்பண்டிதரும், சங்கீத வித்துவானுமாகிய ஸ்ரீமான் G ஜோசப்நாடாரவர்கள்M.A. B.L பொதுவாகசிலவிஷயங்களைப்பேசி விட்டுகனம் அதிபரவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் பின்னடைதல் கூடாததோடு அவர்கள் வேண்டுகோளின்படி 'மித்திரன்' க்ஷேமநிதியை சேகரித்து அனுப்ப நம்மால்கூடிய முழு முயற்சியும் செய்யவேண்டுமென்றும் பேசிமுடித்தனர்.

அடுத்தாற்போல் இரங்கூனைச்சார்ந்த கிமெந்தான் ஸ்கூல் மானேஜருக்கும், பழுத்தகுலாபிமானியுமாகிய ஸ்ரீமான் L. M. சுவாமிதாஸ் நாடாரவர்கள் அபிமான மேலீட்டால் விஜயம் செய்த கனவான்கள் உள்ளம் உருகும்வண்ணம் தேசிய ஜாதிய விஷயம் சம்பந்தமாக பல மேற்கோளுடன் பேசி 'மித்திரன்' க்ஷேமநிதிக்கு உதவிசெய்தல்தல் நமது கடமையும் அவசியமுமாகுமென்று மிகுந்த உற்சாகத்துடன் பேசினார்கள். ஷை இருகனவான்களுக்கும் மறுமுறையும் மாலைசூட்டப்பட்டது. அக்கிராசனர் முடிவுரைக்குப் பின்னர்சங்கம்ஜெனரல் செக்ரட்டெரியால் தலைவரவர்களுக்கும், கனம் அதிபரவர்களுக்கும்கனம் கௌரவ மானேஜரவர்களுக்கும், மற்றும்முக்கியஸ்தர்களுக்கும், சபையோர் அனைவருக்கும்வந்தனோபசாரஞ்சொல்லப்பட்டது. விஜயஞ்செய்த கனவான்கள் யாவருக்கும் சிற்றுண்டி பரிமாறப்பட்டு தாம்பூலம், புஷ்பம் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் செந்தூர் நாடாரவர்கள் 'கிராமபோன்' என்ற வாத்தியக் கருவி கொணர்ந்து வாசிக்கச் செய்து சபையோர் யாவரையும் குதூகலமடையச் செய்தனர். இரவு சுமார் 11 மணிக்கு இராஜவாழ்த்துடன் சபைகலைந்தது என்று ஸ்ரீமான் ச. பெ. தெய்வநாயக நாடார் எழுதுகிறார்.

## சங்கவிஷயங்கள்.

### தூத்துக்குடி. தக்ஷணமாற நாடார் பேட்டை நிதிச்சங்கம்.

தூத்துக்குடி வக்கீல் மகா-ா-ஸ்ரீ A. C. பால்நாடார் பி. ஏ. பி. எல். அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் 11-2-23 ல் ஷை பேட்டைக் கட்டடத்தில் ஓர் ஸ்பெஷல் மீட்டிங் கூடியது.

அதில் 25-1-23 ல் கூடிய மீட்டிங்கு தீர்மானப்படி புதிதாக 25கமிட்டி மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

24-2-23 ல் நடக்கப்போகிற கமிட்டி மீட்டிங்கில் புதிய உத்தியோகஸ்தர்கள் நியமித்தல் ரூல்ஸ் நிர்மாணித்தல் மகமை வசூல் செய்தல் வசூல் தொகையை டிப்பாசிட்டு செய்தல் என்னும் விஷயங்களைப்பற்றி தீர்மானிக்கப்படும் என்று ஸ்ரீமான் கணக்கு தங்கவேலு நாடார் எழுதுகிறார்.

∴

### விளாம்பட்டி, நாடார் மகாஜன கிளைச் சங்கம்.

31-1-23 ல் ஷை சங்கம் ஸ்ரீமான் வெ. அ வ. அருணாசலம் நாடார் அவர்கள் தலைமையின் கீழ் இவ்வூர் நாடார் கலாசாலையில் சுமார் 8-மணிக்குகூட்டப்பட்டது. அவ்வமயம் நான்கு கனவான்கள் விஷயதானம் புரிந்தார்கள். சபாநாயகரவர்கள் முகவுரை முடிவுரையாகப் பேசும்பொழுது சங்கமெம்பர்கள் தினமும் பத்திரிகைகள் கட்டாயம் வாசிக்கவேண்டுமென்றும், ரீடிங்ரூம் ஒன்று கூடிய சீக்கிரம் ஏற்படுத்தவேண்டுமென்றும் பேசினார்கள். வந்தனோபசாரம் சொல்லி இராஜ கீதம் பாடி சங்கம் இனிது கலைந்தது என்று ஸ்ரீமான் A. M. S. அண்ணாமலை நாடார் எழுதுகிறார்.

∴

### க்ஷத்திரிய பால்ய கிளைச்சங்கம் நவேப்பட்டி.

இச்சங்கத்தின் பத்தாவது மாதாந்தர ஜெனரல் மீட்டிங் 2-2-23 ல் அக்கத்தினர்களிடத்தில் சந்தா வசூல்செய்தபின் இரவு 8-மணிக்கு சபை கூடியது. ஸ்ரீமான் A. P. வீரபத்திர நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் அன்று பல தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டு ஒரு வருஷம் மகமை ஒற்றுமையில்லாமல் யிருந்ததினால் மகமை வசூலைப்பற்றியும் தீர்மானிக்கப்பட்டுப்பின் சபை கலைந்ததுஎன்று காரியதரிசி எழுதுகிறார்.

∴

### வடக்கன்குளம் நாடார் க்ஷத்திரிய ஐக்கிய சங்கம்.

வடக்கன்குளம் ஸ்ரீமான் A. M. அலங்கார நாடார், A. M. பிதேலி நாடார் இவர்களுடைய பொதுக் கட்டடத்தின் மேடையில் ஷை சங்கம் 2-வது மீட்டிங் 11-2-23 ல் பகல் 2-மணிக்கு ஸ்ரீமான் M. G. வியாகப்ப நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் குலாபிமானிகள் பலர் உபந்நியாசஞ் செய்தார்கள் என்று காரியதரிசி எழுதுகிறார்.

## கவனிப்பு.

நமது சுற்றுப் பிரயாண ஏஜெண்டு மிஸ்டர் A. சிவசாமிப்பாண்டியர் மலையாள பிரதேசத்திலுள்ள நாகர்கோவில், தென்திருவிதாங்கூர், வட்டகைகோட்டார்நெய்யாற்றின்கரை, நெய்யூர்முதலியஇடங்களுக்கு சுற்றுப்பிரயாணஞ்செய்கிறார். நமது மித்திராபிமானிகள் ஆதரித்து அனுப்ப வேண்டுகிறோம்.

மானேஜர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# இலங்கை வர்த்தமானம்

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

## ரயில்வேவிபத்து விசாரணைக்கழகம்

தலைமன்னார் ரயில்கவிழ்க்கப் பட்டதினிமித்தம் உயிர்ச்சேதம் ஏற்பட்டதையும், அநேகர் காயமடைந்ததையும் ஏற்கனவே நமது மித்திரனில் வெளியிடப்பட்டிருக்கிறது. பொது ஜனங்களின் கிளர்ச்சி பொறுக்கமுடியாது, அரசாங்கத்தார் சமீபத்தில்விசாரணைக் கழகமொன்று ஏற்படுத்தியிருக்கின்றனர். Hon. Sir. P. ராமநாதனவர்கள் இலங்கை வாசிகளின் சார்பாக இச்சபையில் அமர்ந்திருக்கிறார்கள்: மற்றெல்லோரும் அரசாங்க உத்தியோகஸ்தரான ஐரோப்பியராவர். இந்தியரான நம்மவர்கள் எத்தனையோ பேர் உயிர்துறந்தனம். (முன்குறிப்பிட்ட உயிர்ச்சேதங்கள் இன்னும் உறுதியாகவில்லை.) இந்திய கனவான் களிலொருவராவது இக்கழகத்தில் கூட்டப்படாதது சிந்திக்கத் தக்கதே. இது காறும் விசாரிக்கப்பட்ட வரையில் அருகாமையிலுள்ள பெரிய குளங்களுக்கு சரியான மதகுகள் கட்டப்படாதிருந்ததையாலும், குளக்கரைகள் உறுதியான வைகளாய் அமையப் பெறாதிருந்தும், குளங்கள் உடைக்கும் பக்ஷத்தில் வெளியேறும் ஜலத்திற்கு எற்றவாய்க்கால்வாய்கள் வெட்டிப்போக்கு விடாமலும், ரயில் பாதையில் போதுமான வாரதிகளில்லாமையாலும், இவ்வாபத்து நேரிட்டதாகத் தெரியவருகிறது. இந்தியப் பிரயாணிகளுக்கு உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டதைக் குறித்து, நமது அரசாங்கத்தார் இலங்கை அதிகாரிகளிடமிருந்து பூரா விபரங்களையும் சமர்ப்பிக்கச் செய்ய வேண்டுவதுமன்றி, இனிமேலாவது இந்தியப் பிரயாணிகளுக்குச் செய்யவேண்டியதக்க வசதிகளைச் செய்யமுயலுவது அவர்களைச்சார்ந்த கடமையாகும்.

காங்குநேரித்தாலுகாவிலுள்ளராதாபுரத்தில் சத்திரமொன்று கட்டியிருப்பதாகவும், அதற்குப் பக்கத்தில் கிணறொன்று தோண்டவும், சுற்றிவரக்கோட்டை கட்டவும் வேண்டிய செலவுகளுக்காகப் பணஞ்சேகரிக்க வேண்டி, அவ்வூர் ரிஜிஸ்தர் ஆபீசில் வேலைபார்க்கும் நாவீது நாடாரவர்கள் இவ்விடம் சிரமத்தைக்கருதாது விஜயஞ் செய்திருக்கின்றனர். இராமபிரானின் உபத்திரவம் நிறைந்த அவ்வூரில், நம்மவர்களுக்கென்று சத்திரமொன்றிருப்பது இன்றியமையாதவசியம். குலாபிமானிகளின் உதவிகளைப்பிரியத்துடன் எற்றுக்கொள்ளப்படும்.

## கவர்னர் வருகை.

மாட்சிமை தங்கிய கவர்னர், சர் வில்லியம் மானிங், நேற்று (12-2-23) "க்ருண்டா" என்னும் கப்பலில் தமது மனைவியுடனும் தமதருங்குழவியுடனும் கொழும்பு வந்திறங்கினர்கள். புதிய சீர்திருத்தமசோதா கூடிய சீக்கிரம் பத்திரிகைகளில் பிரசுரமாகும்போலத் தெரிகிறது.

## மீன்சாராயவன்.

இவ்விலங்காத்வீபத்தில் டி. எம். டி. ஸ்டீபன் என்பவரைக் கேள்விப்படாதவர் சிறுபான்மையோரே. இவர் சிலமாதங்களுக்குமுன் இத்தீவிலிருந்தபோது எத்தனையோ பொதுஜன ஊழிய சங்கங்களுக்கும், வறிஞர்களுக்கும் பணஉதவி செய்வதாக வாக்களித்தார். வர்த்தக கலசாலை ஒன்றையும் திறந்தார், பொதுஜன சீர்திருத்தத்திற்காக போதுமான பணங்கொடுப்பதாகச் சொல்லிபோன விடங்களிலெல்லாம்கொழுத்த அமுதுண்டார் இதுமாத்திரமா! இலவசமாய்ப் படிக்கவிரும்புவோர் தமக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டுமென்று பத்திரிகைகளில் தீட்டினர். மிஸ்டர் ஸ்டீபனுக்கு வாசிக்க இயலாதபடி ஒரே தினத்தில் குறைந்தது 400 கடிதங்கள் வந்ததாகக் கேள்வி. இப்பரோபகாரியின் காருண்யத்தைக் கேள்விப்பட்டதும் சுற்றுதவர்களெல்லாம் சுற்றினர். பிணம் எங்கேயோ அங்கு கழுகுகள் கூடுவது வாஸ்தவமல்லவா? வாழ்வாருண்டானால்வருவாரும் போவாரும் என்பது பொய்யாமோ? உயர்தரநீதி மன்றத்தின் நியாயாதிபதி கூட இவரைத் தம்முடன் அழைத்துச் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். குபேரர்களான தனவந்தர்கள் விருந்தளித்தனர். கவர்னர் துரையவர்களும் இத்தகையகாருண்யவானைக்கண்டுமயங்கி, அமுதளித்ததுமல்லாமல், J. P. (சமாதானப் பிரபு) என்ற கௌரவ பட்டத்தையும் கொடுத்தார். "இதுதானு பூலோக மென்றிருக்க" கிளம்பினது புகை. திடீரென 46,000 ரூபாய்க்கு வஞ்சித்ததாக போலீஸ் கோர்ட்டில் பிரியாது வெளியாயிற்று. ஹோட்டல் பில்லுகளெல்லாம் (Bills) வாட்டமின்றி வெளியாயின. மோட்டார் பில்லுகள் வெகு வேடிக்கையாய் பறந்தன. போலீஸ் கோர்ட்டில் குற்றவாளியின் படம் ஒட்டப்பட்டது. வாரண்டுபிறந்தது. J. P. யைக் காணோம். இலங்கையிலே இல்லை என்ற செய்தி வெளிக்கிளம்பிற்று. தூத்துக்குடிக் கப்பல் மூலமாகவும், வெளியேற வில்லை. தலைமன்னார் ரயில் மூலமாகவும் போகவில்லை. பின்னர் எவ்விதம் வெளியானர் இலங்கையின் வடபாகத்திற்குப் போய் ஏதோவொரு தோணிமூலமாக நாகபட்டணம் சென்று புனைப்பெயர் பூண்டு ஏறிவிட்டார் கப்பல். இப்பெருந்தகையானைக் காணுமல் துறைமுகங்களுக்கெல்லாம் தந்திகள் பறந்தன. கப்பல்களுக்கெல்லாம் அறிவிப்புச் சாற்றப்பட்டது. இறுதியில் பினங் துறைமுகத்தில் ஓர் கப்பலில் கைதுசெய்யப்பட்டு இன்று (13-2-23) கொழும்பில் வந்திறங்கினர். இக்கனவான் முகத்தைத் தரிசிக்க துறைமுகத்திலும், கோர்ட்டிலும் குழுமியிருந்த ஜனங்கள் எண்ணிறந்தோர். உடன்போலீஸ் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது. குற்றவாளியல்ல என்று மறுத்துரைத்தார். ஜாமீனில் எற்பார் ஒருவருமில்லை மறுதினத்திற்கென்று பிரியாது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இக்காலம் கலி காலமன்றோ!

# தனவந்தர்களே!

சுவாமி விவேகானந்தர் தமது சீடர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவிலுள்ள செல்வந்தரை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறார்.

"ஆரிய வமிசத்திலே பிறந்தோம் என்று நீங்கள் பெருமை பாராட்டிக் கொண்டபோதிலும், பண்டை இந்தியாவின் புகழை நீங்கள் பாடிக்கொண்டிருந்த போதிலும், உங்களுடைய பிறப்பில் நீங்கள் கர்வங் கொண்டிருந்த போதிலும் இந்தியாவிலுள்ள செல்வர்களே! நீங்கள் உயிருடனிருப்பதாகநினைக்கிறீர்களா? நீங்கள் நடைப் பிணங்கள். உங்களுடைய வீடுகள், உங்களுடைய சாமான்கள் முதலியன யாவும் உயிரற்றவை. இந்த உலகம் மாயை என்று சிலர் கூறுகின்றனர். உண்மையில் நீங்கள் தான் மாயையகள்; நீங்கள் தான்கானல் நீர். பழைமைக்கு இலக்கியமாக நீங்கள் இருக்கிறீர்கள். எதிர் காலத்தில் பயனற்றவைகளைத் தள்ளிவிடப்பட வேண்டியதற்கும் இப்பொழுது நீங்கள் பிரதிநிதிகளாயிருக்கின்றீர்கள். பொய் வாழ்க்கையை நடத்தும் பெரியோர்களே, இன்னும் ஏன் இந்த உலகத்தில் உலாவிக்கொண்டிருக்கிறீர்கள்? புராதன இந்தியா என்ற பிணத்தின் ரத்த மற்ற, சதை யற்ற உருவங்களாக விளங்கும் நீங்கள் ஏன் மண்ணோடு மண்ணாகப் போகக்கூடாது? உங்களுடைய சதையற்ற விரல்களில் மதிப்பற்ற மோதிரங்களை அணிந்து கொண்டிருக்கிறீர்கள்; கணக்கற்ற செல்வத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். கல்வியும் நாகரீகமும் வளர்ந்து கொண்டுவரும் இந்நாளில் இன்னும் இந்தப் பணத்தை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் சந்ததியாருக்கு அவைகளை அளித்துவிடுங்கள். நீங்கள்விரைவில் மறைந்து விடுங்கள். உங்களுடைய இடத்தில் புதிய இந்தியா தோன்றட்டும். கலப்பையை பிடித்துக் கொண்டிருக்கும் குடியான வனிடமிருந்து, சக்கிலிபனிடமிருந்து, குப்பை கூட்டுவோனிடமிருந்து புதிய இந்தியா உதயமாகட்டும். பலசரக்கு வியாபாரிகளிடமிருந்து, கைத்தொழிற்சாலைகளிலிருந்து சந்தைகளிலிருந்து புதிய இந்தியா வெளிவரட்டும். சோலைகளிலிருந்து, வனங்களிலிருந்து, மலைகளிலிருந்து புதிய இந்தியா கிளம்பட்டும். பழைமையின் எலும்புருவங்களே! உங்களுடைய சந்ததியார் இவர் தான். இவர்களிடத்திலேயே எதிர்கால இந்தியா அடங்கியிருக்கப் போகிறது. உங்களுடைய மோதிரங்களையும் பணப்பெட்டிகளையும் இவர்களிடத்தில் எறிந்து விட்டு ஆகாயத்தில் மறைந்துவிடுங்கள். எவரும் உங்களைத் திரும்பக் காணுதபடி மறைந்து விடுங்கள். உங்களுடையசெவிகளை மாத்திரம் திறந்து வைத்திருங்கள். அப்பொழுது புதிய இந்தியாவின் துடிப்பு உங்கள் செவியில் கேட்கும்.

தமிழ்நாடு

"நாடார்குல மித்திரன்" பத்திராதிபர்,

# ஸ்ரீமான் S. A. முத்து நாடாரவர்களுக்கு,

பர்மா பால்ய நாடார் சங்கத்தின் கல்வி அபிவிருத்தி சங்கத்தார் சமர்ப்பித்த

## வரவேற்பு வந்தனேபசாரப் பத்திரம்.

தமிழ்பூஷணமே! பாண்டியன் மாபினேர்கள் மீண்டும்உலகில் க்ஷேமமுற்றுவாழ எண்ணங்கொண்டு பத்திரிகை தோன்றச்செய்து, உலகில் தோன்றியிருக்கும் சுதந்தரப் போராட்டத்தில் நமது பிறப்புரிமையாகிய "சுதந்திரம்" என்ற மந்திரத்தை உபதேசித்த உங்களது பெருந்தகைமைக்கு நாங்கள் என்ன கைமாறு செய்யவல்லோம்! உங்கள் வரவு நல்வரவாகுக!!

பத்திரிகைநடத்த உத்தமரே! உலகில் ஓர் ஜனசமூகமானாலும், ஓர் தேசமானாலும் பத்திரிகையால் முற்போக்கடைதல் கூடும் என்ற சீரிய கொள்கையை அனுபவத்தில் கண்டும், பெரியோர்களின் வாக்கை நோக்கியும் சிரமம் கருதாது குலாலம் கருதி வெளிப்போந்த உங்களது தயாள சாந்தகுண சீலங்களை என்னென்றுரைப்பாம்!

சுதந்திரியானுகூலரே! பத்திரிகை நடத்திவருவதால் எற்பட்ட பண நஷ்டத்தையும், வியாபாரத்திற்கு ஏற்படும் தடையையும் பொருட்படுத்தாது,

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

என்ற திருவள்ளுவப் பயனை நினைத்து பத்திரிகை நடத்துவதில் கொண்டுள்ள ஊக்கத்தையும், மனஉறுதியையும், நம்பிக்கையையும், ஆத்மசக்தியையும் நினைத்து உள்ளங்களிந்து மகிழ்வெய்துகிறோம்.

மதிநலவாரிதியே! "மித்திரன்" நிலவுலகில் என்றும் புகழ்பெற்று நிலவுவான்வேண்டி மூலதனம் சேர்க்கவும், பத்திரிகை நடாத்துவதில் தேசாதேசங்களின் அனுபவமும், மகாஜனங்களின் மனப்போக்கையும் நேரிற் தெரிவான் கருதி, திரேக சிரமங்கொள்ளாது, கடல் கடந்துவந்த உங்கள் குலாபிமானத்தை வியந்து பாராட்டுகின்றோம்.

நாடார்குலமித்திர ரத்தினமெனும் எங்கள் முத்தே! மித்திரனை வாரப்பதிப்பாக்கி எம்மனோர்களாகிய இளஞ்சிறுர்களுக்கு குலாபிமானத்தையும், தேசாபிமானத்தையும், சமூக ஊழியச்சிந்தையையும், இலௌகீக, வைதீக மார்க்கங்களையும் போதித்து ஈடேற்றிவைப்பான்வேண்டி தம்மையாய் வேண்டுகிறோம். இதுவே எங்கள் கோறிக்கை.

சான்றவர் குலத்துதித்த சான்றோரே! "மித்திரன்" க்ஷேமநிதியில் எங்கள் சங்கத்தாரும் பங்கெடுத்துக்கொள்ளுதல் கடமையாதலால், நாங்கள் செய்யும் இச்சிறு நன்றியாகிய ரூ 20 ஐயும் பெற்றுக்கொண்டு மித்திரன் க்ஷேமநிதிக்காக சேர்த்துக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கல்விக்களஞ்சியமே! தாங்கள் கொண்டுள்ள நமது சமூகமுன்னேற்றத்தின் சகல சதுபாயங்களும் சித்தியாகுமாறும் இவண்விஜயஞ்செய்தஉங்கள் நன்னோக்கம்நிறைவேறி உள்ளக்களிப்புடன் தாய்நாடுதிரும்பி எங்கள் கோறிக்கையை ஈடேற்றி வைப்பான்வேண்டியும் ஆக்கவும், அழிக்கவும் வல்லபரம்பொருள் உங்கள்பக்கமிருப்பாரூக. சுபம்!

இரங்கோன் }
31—1—23 }

இங்ஙனம்
அன்புமிக்க
பர்மாபால்யநாடார் சங்கத்தின் கல்வி அபிவிருத்தி சங்கத்தார்.

# தேவை.

தொம்பக்குளம் நாடார் வித்தியாசாலைக்கு பிரைமரி பரீக்ஷையும் உபாத்தியாயர் பரீக்ஷையும் பாஸ்பண்ணின உபாத்தியாயர் தேவை. அனுபோகத்துக்கும் சாமார்த்தியத்திற்கும் தக்கபடி சம்பளம் கொடுக்கப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பம் செய்யவும்.

P. S. தங்கப்ப நாடார்,
நாடார் வித்தியாசாலை,
தொம்பக்குளம், ராஜபாளையம் P O

நமது மித்திரன்

# போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை, நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூடு தண்டுப்பத்து,மிருஸ்தார் ஸ்ரீமான் சோ செல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்வீளை திருநெல்வேலி ஜில்லா, (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுநாடன் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினர் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection